winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

ஜூன் 2022

ஜூன் 22-30

**1. கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான நாடு தழுவிய முன்னெடுப்பான, 'NIPUN' என்பது கீழ்க்காணும் எந்த நடுவண் அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?**



**அ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

ஆ. MSME அமைச்சகம்

இ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

ஈ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ நடுவண் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அண்மையில் கட்டுமானத் தொழிலாளர்களின் திறன்பயிற்சிக்கான 'NIPUN' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இது கட்டுமானத் தொழிலாளர்களின் திறமையை மேம்படுத்துவதற்கான ஒரு நாடு தழுவிய முன்னெடுப்பாகும். இது தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (DAY–NULM) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் முன்னெடுப்பாக உள்ளது. இது 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் பயிற்சியளிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

**2. இந்தியாவில் எட்டாவது சர்வதேச யோகா நாளின் கொண்டாட்டங்கள் முதன்மையாக நடைபெற்ற இடம் எது?**



அ. தென்காசி

**ஆ. மைசூரு ☑**

இ. ஹைதராபாத்

ஈ. காந்தி நகர்

✓ கர்நாடக மாநிலம் மைசூருவில் நடைபெற்ற எட்டாவது சர்வதேச யோகா நாள் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த ஆண்டு யோகா நாள் கொண்டாட்டத்தின் கருப்பொருள், 'Yoga for Humanity' என்பதாகும். உலகம் முழுவதும் 25 கோடிக்கும் அதிகமானோர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று யோகாசனம் செய்தனர்.

**3. பன்னாட்டு அமைதிகாக்கும் பயிற்சியான, 'கான் குவெஸ்ட்–2022' நடத்தப்பட்ட நாடு எது?**



அ. பிரான்ஸ்

ஆ. ஓமான்

**இ. மங்கோலியா ☑**

ஈ. ஈரான்

✓ 'கான் குவெஸ்ட்–2022' என்ற பன்னாட்டு அமைதிகாக்கும் பயிற்சி மங்கோலியாவில் உள்ள உலான்பாதரில் நடத்தப்பட்டது. இந்தப்பயிற்சியானது 16 நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினரிடையே பரஸ்பர கற்றல் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கியது. இப்பயிற்சியில் லடாக் சாரணர்களின் பணியாளர்கள் அடங்கிய இந்தியக்குழு பங்கேற்றது. ஐக்கிய நாடுகள் (UN) அவையின் ஆணையின்படி, உத்திசார் ஒத்திகைகள் இதன் சமயம் நடத்தப்பட்டன.

**4. உலகின் மிகப்பெரிய நன்னீர் மீனானது அண்மையில் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?**



அ. ஆஸ்திரேலியா

ஆ. சீனா

**இ. கம்போடியா ☑**

ஈ. சிலி

✓ கம்போடியாவில் பாயும் மீகாங் ஆற்றில் பிடிபட்ட 300 கிலோகிராம் எடையுள்ள திருக்கை மீன், உலகில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட மிகப்பெரிய நன்னீர் மீன் ஆகும். உலகின் மிகப்பெரிய நன்னீர் மீன்பற்றிய அதிகாரப்பூர்வ தரவு இல்லை என்றாலும், இதற்குமுன் பதிவுசெய்யப்பட்டதிலேயே மிகப்பெரிய மீன் 293 கிலோ எடையுள்ள மீகாங் பெருங்கெளுத்தி ஆகும்; அது 2005இல் தாய்லாந்தில் பிடிபட்டது. மீகாங் ஆறு திபெத்திய பீடபூமியிலிருந்து சீனா, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் வழியாகப் பாய்கிறது.

**5. ICICI வங்கி, HDFC வங்கி மற்றும் NPCI ஆகியவற்றின் சில வளங்களை, 'முக்கியமான தகவல் உட்கட்டமைப்பு' என அறிவித்துள்ள நடுவண் அமைச்சகம் எது?**

**அ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ. நிதியமைச்சகம்

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

✓ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது ICICI வங்கி, HDFC வங்கி மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) ஆகியவற்றின் தகவல் தொழில்நுட்ப வளங்களை, 'முக்கியமான தகவல் உட்கட்டமைப்பு' என அறிவித்துள்ளது. தகவல் தொழில்நுட்பச் சட்டம் – 2000 'முக்கியமான தகவல் உட்கட்டமைப்பை' ஒரு 'கணினி வளமாக' வரையறுக்கிறது. எந்தவொரு தரவு, தரவுத்தளம், தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு அல்லது தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு ஆகியவற்றை இவ்வாறு அறிவிக்க அரசாங்கத்திற்கு அதிகாரமுள்ளது.

**6. 2022 – உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Invest in our Planet

**ஆ. Only One Earth ☑**

இ. 50th Environment Day

ஈ. Live with the Nature




✓ பாழான சுற்றுச்சூழல் நிலைமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5 அன்று உலக சுற்றுச்சூழல் நாள் கொண்டாடப்படுகிறது. ஐநாஇன் சுற்றுச்சூழல் திட்டம் என்பது உலகெங்கிலும் உள்ள நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்தும் ஒரு மைய நிறுவனமாகும்.

✓ 2022ஆம் ஆண்டு 50ஆம் உலக சுற்றுச்சூழல் நாளைக்குறிக்கிறது. சுவீடன், இந்த ஆண்டு நிகழ்வின் தொகுப்பாளராக உள்ளது. "Only One Earth" என்பது இந்நாளின் கருப்பொருளாகும். இது 1972 ஸ்டாக்ஹோம் மாநாட்டின் முழக்கமாக இருந்தது.

**7. இந்திய வான்படையானது இந்திய வான்படை பாரம்பரிய மையத்தை அமைப்பதற்காக எந்த மாநிலம்/UT உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. சிக்கிம்

ஆ. கேரளா

**இ. சண்டிகர் ☑**

ஈ. தெலுங்கானா

✓ சண்டிகர் யூனியன் பிரதேச நிர்வாகமும் இந்திய வான்படையும் இந்திய வான்படை பாரம்பரிய மையம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இம்மையத்தில் சிமுலேட்டர்கள், பணிநீக்கஞ்செய்யப்பட்ட விமானம், ஏரோ எஞ்சின்கள் மற்றும் பிற IAF கலைப்பொருட்கள் இருக்கும். இந்த மையத்தில் விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் AI தொழில்நுட்பமும் இருக்கும். பாரம்பரிய மையம் தகவல் தருவதாகவும், நாட்டின் இளைஞர்களை ஆயுதப்படைகளில் சேர ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருக்கும்.

**8. காப்புக்காடுகள், வனவுயிரிகள் சரணாலயத்திற்கு குறைந்தபட்சம் எத்தனை கிமீட்டர் தொலைவில் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை (ESZ) கட்டாயமாக அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது?**

அ. 0.5 கிமீ

**ஆ. 1 கிமீ ☑**

இ. 2 கிமீ

ஈ. 3 கிமீ



✓ நாடு முழுவதுமுள்ள ஒவ்வொரு காப்புக்காடு, தேசியப்பூங்கா மற்றும் வனவுயிரி சரணாலயம் ஆகியவை அவற்றின் வரையறுக்கப்பட்ட எல்லையிலிருந்து தொடங்கி குறைந்தபட்சம் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு கட்டாய சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின்படி, சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் குறைந்த பாதுகாப்பை உள்ளடக்கிய பகுதிகளுக்கான ஒரு மாறுதல் மண்டலமாகச் செயல்படும்.

**9. 2022 – பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**

அ. ஆஷ்லே பார்ட்டி

**ஆ. இகா ஸ்விடெக் ☑**

இ. மரியா சக்காரி

ஈ. நவோமி ஓசாகா



✓ 2022–பிரெஞ்சு ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் நெ:1 வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாடெக் அமெரிக்க இளம் வீராங்கனையான கோகோ காப்பை வீழ்த்தி பட்டத்தை வென்றார். 21 வயதான அவர் மூன்று ஆண்டுகளில் தனது இரண்டாவது பட்டத்தை 6–1, 6–3 என்ற நேர் செட்களில் காப்புக்கு எதிராக வென்றார். முதல் 10 இடங்களுக்குள் வந்த இளம் வீராங்கனை இவராவார். 2020–பிரெஞ்சு ஓபன் சாம்பியனான இகா, போலந்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் வீராங்கனை ஆவார்.

**10. 2022இன், 'செலண்ட் மாதிரி' வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ள வங்கி எது?**

**அ. இண்டஸ்இண்ட் வங்கி ☑**

ஆ. HDFC வங்கி

இ. ஐசிஐசிஐ வங்கி

ஈ. ஆக்சிஸ் வங்கி

✓ இண்டஸ்இண்ட் வங்கியானது அதன் வகையில் சிறந்த நிறுவன கொடுப்பனவு மையத்தைக் கட்டமைத்ததற்காக 'Payments System Transformation' பிரிவின்கீழ் உலகளாவிய, 'செலண்ட் மாதிரி வங்கி' விருதைப் பெற்றுள்ளது. முகிலடிப்படையிலான நடுவண் கொடுப்பனவு மையத்தை உருவாக்குவதில் வங்கியின் சிறந்த பயணத்தை இந்த விருது அங்கீகரிக்கிறது. உலகளவில் நிதி நிறுவனங்களுக்கான தொழில்நுட்பத்தில் கவனஞ்செலுத்தும் முன்னணி ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனமான 'செலண்ட்' இந்த விருதை வழங்குகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாடு: கரோனா பாதித்தோரில் 25% பேருக்கு பிஏ–5 வகை தாக்கம் – பொதுச்சுகாதாரத்துறை ஆய்வில் தகவல்**

இந்த மாதத்தில் COVID–19 தொற்றுக்கு உள்ளானவர்களில் 25 சதவீதம் பேர் ஒமைக்ரான் பிஏ–5 வகையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்தது.

இதுகுறித்து பொதுச்சுகாதாரத்துறை கூறியதாவது:

கடந்த மே மாதத்தில் பிஏ–2 வகை தொற்று பாதித்தவர்களின் விகிதம் 36 சதவீதமும், பிஏ–2.38 வகை பாதிப்புக்கு உள்ளானவர்கள் விகிதம் 35 சதவீதமாகவும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் பிஏ–4, பிஏ–5 ஆகியவை முறையே 1.4 சதவீதம் மற்றும் 4 சதவீத பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தன. இந்த நிலையில், ஜூன் மாதத்தைப் பொருத்தவரை பிஏ–2.38 வகை தொற்றுக்குள்ளானோர் 35 சதவீதமாகவும், பிஏ–5 வகை பாதிப்புக்குள்ளானோர் 25.2 சதவீதமாகவும் உள்ளது.

---

**2. விம்பிள்டன்**

டென்னிஸ் காலண்டரில், ஓர் ஆண்டில் நடைபெறும் 3–ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன், வரும் 27–ஆம் தேதி தொடங்கி, ஜூலை.10–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான இருபாலர் தகுதிச்சுற்று ஆட்டங்கள் திங்கள்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றன. அடுத்தகட்டமாக பங்கேற்பாளர்களுக்கான போட்டித்தரவரிசையும் (சீட்) செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புல்தரையில் நடைபெறும் ஒரே கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் குறித்த சில விவரங்கள், இதோ.

**போட்டி தொடக்கம்:** 1877

**நடப்பு ஆண்டு போட்டி:** 135–ஆவது சீசன்

**நடப்பு சாம்பியன்கள்**

**ஆடவர்:** நோவக் ஜோகோவிச் (செர்பியா)

**மகளிர்:** ஆஷ்லி பார்ட்டி (ஆஸ்திரேலியா) (ஓய்வு)

**ஆடவர் இரட்டையர்:** நிகோலா மெக்டிச்/மேட் பாவிச் (குரோஷியா)

**மகளிர் இரட்டையர்:** சியே சுவெய் (தைவான்)/எலிஸ் மெர்டன்ஸ் (பெல்ஜியம்)

**கலப்பு இரட்டையர்:** டெஸைரே கிராவ்ஸிக் (அமெரிக்கா)/நீல் ஸ்குப்ஸ்கி (இங்கிலாந்து)

**மொத்த பரிசுத்தொகை:** ரூ.386 கோடி

**சாதனைகள்...**

அதிகமுறை சாம்பியன்

**ஒற்றையர்:** ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) (8)

**இரட்டையர்:** டாட் வூட்பிரிட்ஜ் (ஆஸ்திரேலியா) (9)

வயதான சாம்பியன்

ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) (35 வயது / 2017)

இளம் சாம்பியன்

போரிஸ் பெக்கர் (ஜெர்மனி) (17 வயது / 1985)

**'சென்டர் கோர்ட்' நூற்றாண்டு**

விம்பிள்டன் போட்டி நடத்தப்படும் டென்னிஸ் கோர்ட்டுகளில் பிரதானமானதாக இருக்கும், 'சென்டர் கோர்ட்' இந்த ஜூன் மாதத்துடன் நூற்றாண்டை எட்டுகிறது. அதைக் கொண்டாடும் வகையில் சிறப்பு ஏற்பாடுகளை போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

---

**3. ஐநா–உக்கு புதிய தூதர் நியமனம்**

ஐநா–உக்கான இந்தியத்தூதராக, மூத்த வெளியுறவு அதிகாரி ருசிரா கம்போஜ் நியமிக்கப்பட்டார். தற்போது அந்தப் பொறுப்பை வகித்து வரும் டி எஸ் திருமூர்த்திக்குப் பதிலாக அவர் அந்தப் பதவியை ஏற்கவுள்ளார். 1987–ஆம் ஆண்டில் இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியான அவர், தற்போது பூடானுக்கான இந்தியத் தூதராக இருந்து வருகிறார். ஐநா–உக்கான இந்தியத்தூதராக ருசிரா கம்போஜ் கூடிய விரைவில் பொறுப்பேற்பார் என வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. விண்ணில் பாய்ந்தது தென் கொரிய ஏவுகணை**

உள்நாட்டில் முழுமையாக வடிவமைக்கப்பட்ட ஏவுகணை முதல்முறையாக தென் கொரியா வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: முழுக்க முழுக்க தென் கொரியாவிலேயே உருவாக்கப்பட்ட இந்த ஏவுகணையின்மூலம் முதல்முறையாக செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 3 நிலைகளில் இயங்கக்கூடிய, 'நூரி' என்ற இந்த ஏவுகணை பூமியிலிருந்து 700 கிமீ தொலைவில் செயற்கைக்கோளை துல்லியமாகச் செலுத்தியதாக அதிகாரிகள் கூறினர்.

---

**1. இந்தியாவின் முதன்மை தகவல் உட்கட்டமைப்பைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பான நிறுவனமாகும்?**

அ. தேசிய சைபர் ஒருங்கிணைப்பு மையம்

ஆ. தேசிய தகவலியல் மையம்

இ. ICERT

**ஈ. NCIIPC ☑**

✓ தேசிய முதன்மை தகவல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையம் (NCIIPC) என்பது இந்தியாவின் முதன்மையான தகவல் உட்கட்டமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்புவாய்ந்த நிறுவனமாகும். இது 2014–இல் IT சட்டம், 2000–இன் பிரிவு 70A இன்கீழ் நிறுவப்பட்டது. இது NSA–இன் கீழ் உள்ள உளவுத்துறை நிறுவனமான தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பின் (NTRO) ஒருபகுதியாகும்.

**2. சமீப செய்திகளில் குறிப்பிடப்பட்ட விடுதலை அறிவிப்புடன் (Emancipation Proclamation) தொடர்புடையது எது?**



அ. பிளாக் லைவ்ஸ் மேட்டர் இயக்கம்

ஆ. கருக்கலைப்புக்கான உரிமை

இ. வாக்குரிமை

**ஈ. அடிமைத்தனத்தின் முடிவு ☑**

✓ அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன், பிரிவினைவாத கூட்டமைப்பு நாடுகளில் உள்ள ஆப்பிரிக்க அமெரிக்கர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக 1863 ஜன.1ஆம் தேதி அன்று விடுதலை அறிவிப்பை வெளியிட்டார். அடிமைகளை வைத்திருந்தோர் தங்கள் அடிமைகளிடம் இதுகுறித்த தகவலை மறைத்து வைத்ததால், ஈராண்டுகளுக்கும் மேலாக அது பயனற்றதாக இருந்தது. இறுதியாக அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் 1865 ஜூன்.19 அன்று விடுவிக்கப்பட்டனர்.

**3. இந்திய அரசியலமைப்பின் எந்தப்பிரிவின்கீழ் மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் நிறுவப்பட்டது?**



அ. பிரிவு 246

ஆ. பிரிவு 257

**இ. பிரிவு 263 ☑**

ஈ. பிரிவு 267

✓ இந்திய அரசியலமைப்பின் பிரிவு 263, பல்வேறு நிர்வாகப் பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பதற்கான பொதுவான ஒரு மேடையில் அரசு நிறுவனங்களை ஒன்றிணைக்கும் மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலை நிறுவ குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது. மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் 1990–இல் நிறுவப்பட்டது. அதன் தலைவர் பிரதமரும் அதன் உறுப்பினர்களில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளும் உள்ளனர்.

**4. 'UNESCO மன்னர் ஹமத் பின் இசா அல்–கலிபா பரிசு' பின்வரும் எந்தத் துறையில் செய்யப்பட்ட பணிகளை அங்கீகரிக்கிறது?**




அ. இலக்கியம்

ஆ. உயிரியல் அறிவியல்

இ. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**ஈ. தகவல் & தொடர்பு தொழில்நுட்பம் ☑**

- ✓ UNESCO மன்னர் ஹமத் பின் இசா அல்–கலிபா பரிசு / கல்வியில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்களின் பயன்பாடு (ICT) குறித்த விருதானது 2005–இல் பஹ்ரைன் பேரரசின் உதவியுடன் நிறுவப்பட்டதாகும். இது கல்வித் துறையில் ICT–இன் புதுமையான பயன்பாடுகளை அங்கீகாரமளிக்கிறது.

**5. இந்தியாவின் முதல், 'டார்க் ஸ்கை ரிசர்வ்' அமைந்துள்ள வனவுயிரிகள் சரணாலயம் எது?**

**அ. சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயம் ☑**

ஆ. சக்ரஷிலா வனவுயிரிகள் சரணாலயம்

இ. காரகோரம் வனவுயிரிகள் சரணாலயம்

ஈ. போபிடோரா வனவுயிரிகள் சரணாலயம்



- ✓ இலடாக்கில் உள்ள சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயத்தின் ஒருபகுதி 'டார்க் ஸ்கை ரிசர்வ்' ஆக மாறவுள்ளது. இது வானியல்–சுற்றுலாவை மேம்படுத்த உதவும். இப்பகுதி 'ஹான்லே டார்க் ஸ்கை ரிசர்வ்' என அறிவிக்கப்பட்ட உடன், இரவு வானை மிதமிஞ்சிய ஒளி மாசுபாட்டிலிருந்து பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**6. வருடாந்திர BALTOPS கடற்படை பயிற்சியை நடத்துகிற சங்கம் எது?**

அ. ஐரோப்பிய ஒன்றியம்

**ஆ. நேட்டோ ☑**

இ. எஸ்சிஓ

ஈ. ஆசியான்



- ✓ நேட்டோ 16 நாடுகளைச் சேர்ந்த 7000 மாலுமிகள், விமானப் பணியாளர்கள் மற்றும் கடற்படையினருடன் பால்டிக் கடலில் இருவாரகால அமெரிக்கா தலைமையிலான கடற்படைப்பயிற்சியைத் தொடங்கியது. ராணுவக்கூட்டணியில் சேர விண்ணப்பித்த பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றன. வருடந்தோறும் நடக்கும் BALTOPS கடற்படைப் பயிற்சி கடந்த 1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'D2M ஒளிபரப்பு' என்பதன் விரிவாக்கம் என்ன?**

அ. Digital-to-Mobile

**ஆ. Direct-to-Mobile ☑**

இ. Device-to-Mobile

ஈ. Direct-to-Movie



- ✓ தொலைத்தொடர்புத் துறையும் இந்தியாவின் பொது சேவை ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதியும், 'Direct–to–Mobile (D2M) ஒளிபரப்பு' என்ற தொழில்நுட்பத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகின்றன. செயலில் உள்ள இணைய இணைப்பின் அவசியமில்லாமல், நேரடியாக திறன்பேசிகளில் காணொளி & பல்லூடக உள்ளடக்கத்தின் பிற வடிவங்களை ஒளிபரப்ப இது அனுமதிக்கிறது. இந்தத் தொழில்நுட்பம் அகலக்கற்றை இணைய பயன்பாடு பயன்பாட்டை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**8. 2022 – உலக உணவுப் பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Prevent foodborne risks.

**ஆ. Safer Food, Better Health. ☑**

இ. Manage foodborne infections.

ஈ. Safe food to children.



✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.7 அன்று உலக உணவுப்பாதுகாப்பு நாள் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. உணவினால் ஏற்படும் இடர்களைத்தடுப்பது, கண்டறிவது மற்றும் நிர்வகித்தற்கான விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும். உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டு ஐநா அவையால் இந்த நாள் அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு, உலக உணவு பாதுகாப்பு நாளின் கருப்பொருள், "Safer Food, Better Health" என்பதாகும். WHO–இன் அறிக்கையின்படி, உலகில் ஆண்டுதோறும் 600 மில்லியனுக்கும் அதிகமான பேர் உணவினால் பரவும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

**9. காலநிலை நடவடிக்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக, இந்தியா, சமீபத்தில் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. பிரான்ஸ்

**ஆ. கனடா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. சிலி



✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நெகிழி மாசுபோன்ற துறைகளில் பல்வேறு முன்னெடுப்புகள்மூலம் காலநிலை நடவடிக்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் கனடாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இருநாடுகளும் ஒத்துழைத்து, தகவல் பரிமாற்றம் செய்து, பரஸ்பர காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளை அடையும்.

**10. 'எம்பிரஸ்' என்ற சொகுசுக்கப்பல் எந்த மாநிலம்/UTஇலிருந்து கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்




✓ சென்னை துறைமுகத்திலிருந்து, 'எம்பிரஸ்' என்ற சொகுசுக் கப்பலை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அண்மையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் இருந்து இயக்கப்படும் முதல் சொகுசுக்கப்பல் இதுவாகக் கருதப்படுகிறது. பதினோரு மாடிகளைக் கொண்ட இந்தச் சுற்றுலாக் கப்பலில் 2000 பயணிகள் மற்றும் 800 பணியாளர்கள் வரை பயணிக்க முடியும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சூரியவொளிமூலம் இயங்கும் அடுப்பு: இந்தியன் ஆயில் நிறுவனம் உருவாக்கம்**

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்தைத் தாண்டி விற்பனை செய்யப்படும் நிலையில், இந்தியன் ஆயில் நிறுவனம் சூரியவொளிமூலம் இயங்கும் அடுப்பை உருவாக்கியுள்ளது. சூரியவொளியின்மூலம் உருவாகும் வெப்ப ஆற்றலைச் சேமித்து வைத்து, இரவிலும் இந்த அடுப்பைப் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

'சூர்யா நுடன்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அடுப்பின் விலை ₹18,000 முதல் ₹30,000 வரை இருக்கும் என்றும், 3 லட்சம் அடுப்புகளை உருவாக்கினால் இதன் விலை ₹10,000 முதல் ₹12,000 ஆயிரமாக குறையும் என்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்தது.

---

**2. மறுசுழற்சி செய்யப்படும் தங்கம்: 4–ஆவது இடத்தில் இந்தியா**

பழைய நகைகளை மாற்றிவிட்டு, புதிய வடிவமைப்பைக்கொண்ட தங்க நகைகளை வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்காரணமாக இந்தியாவில் பழைய தங்க ஆபரணங்களை மறுசுழற்சி செய்வது அதிகரித்து உள்ளது. உலக தங்க கவுன்சிலின் அறிக்கையும் இதை உறுதி செய்கிறது.

கடந்த 2021–ஆம் ஆண்டில் மட்டும் 75 டன் தங்கத்தை இந்தியா மறுசுழற்சி செய்துள்ளது. இதில் சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா 4–ஆவது இடம் வகிக்கிறது. சீனா, இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகள் முதல் 3 இடங்களில் உள்ளதாக உலக தங்க கவுன்சிலின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. ஜூன் 30–இல் விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–53**

மூன்று செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி–53 ஏவுகலம் வரும் 30–ஆம் தேதி விண்ணில் ஏவப்படுகிறது.


ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மையத்தின் இரண்டாம் ஏவுதளத்திலிருந்து அன்றைய தினம் மாலை 6 மணிக்கு அந்த ஏவுகலம் செலுத்தப்படவிருக்கிறது. அதற்கான 25 மணி நேர கவுண்ட் டவுன் ஜூன் 29–ஆம் தேதி தொடங்கவுள்ளது.

சிங்கப்பூர் நாட்டின் புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் அதில் இடம்பெற்றுள்ளன. முழுக்க, முழுக்க வர்த்தக நடவடிக்கைகளுக்கான திட்டமாக இதனை இஸ்ரோ முன்னெடுத்துள்ளது. இஸ்ரோ தலைவராக சோமநாத் பொறுப்பேற்ற பிறகு செலுத்தப்படும் இரண்டாவது பிஎஸ்எல்வி ஏவுகலம் திட்டம் இதுவாகும்.

பிஎஸ்எல்வி சி–53 ஏவுகலம் தாங்கிச்செல்லும் டிஎஸ்–இஓ செயற்கைக்கோள், பூமியிலிருந்து 570 கிமீ உயரத்தில் சூரிய வட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படவுள்ளது. பிரேசில் நாட்டில் வடிவமைக்கப்பட்ட அந்த செயற்கைக் கோள், சிங்கப்பூரின் புவி கண்காணிப்பு, வேளாண், வனம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்தச் செயற்கைக்கோள் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை வழங்கும் திறன் கொண்டது. இதனுடன் ஆய்வுத்திட்டத்தின்கீழ் வடிவமைக்கப்பட்ட 2 செயற்கைக்கோள்களும் ஏவப்படவுள்ளன.

---

**1. ஓசியானிக்ஸ் சிட்டி என்ற பெயரிலான மிதக்கும் நகரம் அமைக்கப்படவுள்ள நகரம் எது?**



அ. மாலத்தீவுகள்

ஆ. மலேசியா

**இ. தென் கொரியா ☑**

ஈ. சிங்கப்பூர்

✓ உலகின் முதல் மிதக்கும் நகரமான ஓசியானிக்ஸ் சிட்டியை ஐநா இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவித்தது. தென் கொரியாவின் இரண்டாவது பெரிய நகரமான புசான் கடற்கரையில் இது அமைக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு இதற்கானக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பாஷி வாய்க்கால், பசிபிக் பெருங்கடலில் உள்ள எந்த நீரிணையின் ஒரு பகுதியாகும்?**



அ. தைவான் நீரிணை

**ஆ. லூசன் நீரிணை ☑**

இ. கரிமாடா நீரிணை

ஈ. மலாக்கா நீரிணை

✓ தென்சீனக்கடலை மேற்கு பசிபிக் பெருங்கடலுடன் இணைக்கும் பாஷி வாய்க்கால், பிலிப்பைன்ஸின் வடக்குத் தீவான லூசானுக்கும் தைவானின் ஆர்க்கிட் தீவுக்கும் இடையிலான நீர்வழிப்பாதையாகும். இது பிலிப்பைன்ஸ் கடலையும் தென் சீனக்கடலையும் இணைக்கும் லூசன் நீரிணையின் ஒருபகுதியாகும்.

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற உருசிய புறநில ஆட்சிப் பகுதியான கலினின்கிராட் அமைந்துள்ள கடல் எது?**




அ. வட கடல்


ஆ. லாப்ரடார் கடல்

**இ. பால்டிக் கடல் ☑**

ஈ. பியூபோர்ட் கடல்

✓ உருசிய புறநில ஆட்சிப் பகுதியான கலினின்கிராட் கலினின்கிராட் பால்டிக் கடலில் அமைந்துள்ளது. இது லிதுவேனியாவிற்கும் போலந்துக்கும் இடையில் அமைந்துள்ளது. இது 1945 ஏப்ரலில் நாஜி ஜெர்மனியிடமிருந்து சோவியத் ஒன்றியத்தால் கைப்பற்றப்பட்டது. போட்ஸ்டாம் ஒப்பந்தத்தின் விளைவாக இது சோவியத் ஒன்றியத்தின் ஒருபகுதியாக மாறியது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைவிதிப்பின் காரணமாக லிதுவேனியா அதன் எல்லை வழியாக கலினின்கிராட்டுக்கு சரக்குகள் அனுப்பப்படுவதைத் தடை செய்ய முடிவெடுத்ததைத் தொடர்ந்து இது சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றது.

**4. மனித உடலின் எந்தத் திசு / உறுப்பு மைலோடிஸ்பிளாஸ்டிக் நோய்க்குறியால் பாதிக்கப்படுகிறது?**



**அ. இரத்த அணுக்கள் ☑**

ஆ. தைமஸ் சுரப்பி

இ. நிணநீர் நாளங்கள்

ஈ. கணையம்

✓ மைலோடிஸ்பிளாஸ்டிக் நோய்க்குறி என்பது ஓர் அரிய வகை இரத்தப்புற்றுநோயாகும்; இது எலும்பு மஜ்ஜையில் நலமான இரத்த அணுக்களை உருவாக்கும் உடலின் திறனைப்பாதிக்கிறது. இது இரத்த அணுக்களை உற்பத்தி

செய்யும் உடலின் திறனைத் தடுக்கிறது. இரத்தமாற்றம், கீமோதெரபி அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை போன்றவற்றின்மூலம் இந்நோயைக் குணப்படுத்தலாம்.

**5. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் NIPUN திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பான அமைப்பு எது?**

அ. தேசிய திறன் பயிற்சி நிறுவனம்

ஆ. தேசிய திறன் மேம்பாட்டு நிதி

**இ. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் ☑**

ஈ. தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில்

N·S·D·C National Skill Development Corporation
Transforming the skill landscape

✓ மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின்கீழ் வரும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம், வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் NIPUN திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பாகும். இது இந்த முன்முயற்சியின்கீழ் சாத்தியமான பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும்.

**6. 'கருடா ஏரோஸ்பேஸின்' விளம்பரத்தூதராக கையெழுத்திட்டுள்ள இந்தியர் யார்?**

அ. சிவகார்த்திகேயன்



**ஆ. மகேந்திர சிங் தோனி ☑**

இ. இரஜினிகாந்த்

ஈ. கமல்ஹாசன்

✓ மகேந்திர சிங் தோனி கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் விளம்பரத்தூதராகவும் சிறுபான்மை பங்குதாரராகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இது சென்னையைச் சார்ந்த வானூர்தி மற்றும் விண்வெளி உதிரிபாக உற்பத்தி நிறுவனமாகும். அது ஆளில்லா வான்வழி வாகனங்களை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல் ஆகியவற்றைக் கையாள்கிறது. குறைந்த விலை டிரோன்களை உருவாக்குவதில் அந்நிறுவனம் புகழ்பெற்றுள்ளது.

**7. தனது மாநிலப்பட்டாம்பூச்சியாக, 'புளூ டியூக் – Blue Duke'ஐ அறிவித்த இந்திய மாநிலம்/UT எது?**

அ. அருணாச்சல பிரதேசம்



**ஆ. சிக்கிம் ☑**

இ. நாகாலாந்து

ஈ. பஞ்சாப்

✓ சிக்கிம் மாநில முதலமைச்சர் பிரேம் சிங் தமாங், உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு, 'நீல டியூக்'கை மாநிலப் பட்டாம்பூச்சியாக அறிவித்தார். 'நீல டியூக்'கின் அறிவியல் பெயர் '*Bassarona durga*' ஆகும். சிக்கிம் மற்றும் கிழக்கு இமயமலையைப் பூர்வீகமாகக் கொண்டதாகும் இவை. 'நீல டியூக்', வனவுயிர்கள் பாதுகாப்புச் சட்டம், 1972–இன் அட்டவணை–2இன்கீழ் உள்ளது. இது இமயமலையில் ஒரு பாதுகாக்கப்பட்ட இனமாக உள்ளது. சிக்கிம் மாநிலத்தில் 720 வகையான பட்டாம்பூச்சிகள் காணப்படுகின்றன.

**8. 2022 – சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 120

ஆ. 140

இ. 160

**ஈ. 180 ☑**

180

✓ 2022 – சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை 180ஆக உள்ளது. 180 நாடுகள் இடம்பெற்று உள்ள இக்குறியீட்டில் இந்தியா மிகக்குறைந்த மதிப்பெண்களையே பெற்றுள்ளது. காலநிலை மாற்ற செயல்திறன், சுற்றுச்சூழல் நலம் மற்றும் சுற்றுச்சூழல் உயிராற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட 11 சிக்கல் வகைகளில் நாற்பது செயல்திறன் குறிகாட்டிகளில் அது நாடுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது. கொள்கை நடவடிக்கையின் அடிப்படையில் இந்த அளவுருக்களில் இந்தியாவின் செயல்திறன் மிகமிகமோசமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

**9. அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டில் 17,000 இரன்கள் எடுத்த ஜோ ரூட், எந்த நாட்டுக்காக விளையாடுகிறார்?**

அ. தென்னாப்பிரிக்கா

**ஆ. இங்கிலாந்து ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. மேற்கிந்திய தீவுகள்




✓ சர்வதேச கிரிக்கெட்டில் 17,000 இரன்களைக் கடந்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் பெற்றார். முன்னதாக, ஜோ ரூட் டெஸ்ட் கிரிக்கெட்டில் 10,000 இரன்களைக் கடந்திருந்தார். இந்தச் சாதனையை எட்டிய இரண்டாவது இங்கிலாந்து வீரரும் ஒட்டுமொத்தமாக 14ஆவது வீரரும் ஆனார் ஜோ ரூட். இப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் (15,921), ரிக்கி பாண்டிங் (13,378), ஜாக் காலிஸ் (13,289) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**10. 2022–இல் FSSAI–இன் நான்காவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்



✓ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் 4ஆவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார். உணவுப் பாதுகாப்புச் சூழலில், போட்டி மற்றும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை உருவாக்கும் நோக்கத்துடன் 2018–19ஆம் ஆண்டில், 5 அம்சங்களை அடிப்படையாகக்கொண்ட உணவுப் பாதுகாப்புக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ இந்த ஆண்டு, தரவரிசையின் அடிப்படையில் பெரிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்திலும், குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் இரண்டாவது இடத்திலும் உள்ளன. சிறிய மாநிலங்களில் கோவா முதலிடத்திலும், அதனை தொடர்ந்து மணிப்பூர், சிக்கிம் ஆகிய மாநிலங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களில் ஜம்மு & காஷ்மீர் முதலிடத்திலும், தில்லி இரண்டாமிடத்திலும், சண்டிகர் மூன்றாமிடத்திலும் உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. NIA தலைவராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி தினகர் குப்தா நியமனம்**

தேசிய புலனாய்வு முகமை (NIA) தலைவராக மூத்த இ கா ப அதிகாரி தினகர் குப்தா நியமிக்கப்படுவதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்தது. 1987 பஞ்சாப் இ கா ப பிரிவைச் சேர்ந்த தினகர் குப்தா, வரும் 2024 மார்ச்.31–ஆம் தேதி வரை அதாவது பணி ஓய்வுறும் வரை இந்தப்பொறுப்பில் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது நியமனத்துக்கு அமைச்சரவையின் நியமனக் குழுமம் ஒப்புதல் அளித்துவிட்டதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**2. 24-06-2022 - 'கவியரசு' கண்ணதாசன் அவர்களின் 96ஆவது பிறந்தநாள்.**

---

**3. G20 மாநாடு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு**

ஜம்மு-காஷ்மீரில் வரும் 2023ஆம் ஆண்டில் G20 நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்புக் குழுவை அந்த மாநில அரசு அமைத்தது.

உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்திகளாக விளங்கும் அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட 20 நாடுகள் அங்கம் வகிக்கும் G20 கூட்டமைப்பின் அடுத்த கூட்டத்தொடர் 2023இல் ஜம்மு-காஷ்மீரில் நடைபெறுகிறது. இதனை இந்தியா தலைமையேற்று நடத்துகிறது. இதற்கான தூதராக மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், G20 நாடுகளின் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஜம்மு-காஷ்மீர் வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் தலைமையில், ஐவர்கொண்ட குழுவை அந்த மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்துக்கு அதிகமாகவும், சர்வதேச வர்த்தகத்தில் 75 சதவீதத்தையும், மக்கள்தொகையில் 60 சதவீதத்தையும் G20 நாடுகள் கொண்டுள்ளன.

---

**1. இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை பின்வரும் எதனை குறிக்கிறது?**



அ. அதிகாரப்பூர்வ மொழிகள்

ஆ. நிலச்சீர்திருத்தங்கள்

**இ. கட்சித்தாவல் தடை சட்டம் ☑**

ஈ. பஞ்சாயத்து இராஜ்

✓ 52ஆவது திருத்தச்சட்டம், 1985இன் விளைவாக, கட்சித்தாவல் தடைச்சட்டம் எனப் பிரபலமாக அறியப்படும் பத்தாவது அட்டவணை, இந்திய அரசியலமைப்பின் ஒருபகுதியாக மாறியது. மற்றோர் அரசியல் கட்சிக்குத் தாவுவதன் அடிப்ப–டையில் சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதிநீக்கம் செய்வதற்கு இது அனுமதிக்கிறது. மகாராஷ்டிர அரசியல் நெருக்கடி காரணமாக சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றது.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற வரதா ஆறு என்பது கீழ்க்காணும் எவ்வாற்றின் கிளையாறாகும்?**



அ. கிருஷ்ணா ஆறு

ஆ. காவிரியாறு

இ. காளியாறு

**ஈ. துங்கபத்திரை ஆறு ☑**

✓ நடுக்கர்நாடகாவில் பாயும் வரதா ஆறு துங்கபத்திரை ஆற்றின் கிளையாறாகும். கர்நாடகா மாநில அரசு பெட்டி–வரதா ஆறுகளை இணைக்கும் திட்டத்திற்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் விமர்சனங்களைத் தற்சமயம் எதிர் கொண்டுவருகிறது. பெட்டி–வரதா ஆறுகளை இணைக்கும் திட்டம் உத்தரகன்னடாவில் உள்ள சிர்சியில் இருந்து ரைச்சூர் மற்றும் கொப்பல் மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு சுமார் 524 மில்லியன் கன மீட்டர் தண்ணீரை ஏற்றம் செய்ய எண்ணுகிறது. இத்திட்டம் மேற்குத்தொடர்ச்சி மலையின் சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் உள்ள 2,125 ஏக்கர் காடுகளை அழிக்கும் என்று உள்ளூர் ஆர்வலர்கள் எச்சரித்து வருகின்றனர்.

**3. NDA–இன் குடியரசுத்தலைவர் தேர்தல் வேட்பாளரான திரௌபதி முர்மு, எந்தப் பழங்குடியைச் சார்ந்தவர்?**



அ. கோண்டு

**ஆ. சந்தால் ☑**

இ. பில்

ஈ. முண்டா

✓ சந்தால் பழங்குடிகள் கோண்டுகள் மற்றும் பில்களைத் தொடர்ந்து இந்தியாவின் மூன்றாவது பெரிய பழங்குடிச் சமூகமாக உள்ளது. சந்தால் பழங்குடிகள் ஜார்கண்ட், ஒடிசா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பரவலாக வாழ்ந்து வருகிறார்கள். தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் திரௌபதி முர்முவின் சொந்த மாவட்டமான மயூர்பஞ்ச், சந்தால் மக்கள் அதிகம் வசிக்கும் மாவட்டங்களுள் ஒன்றாகும். திரௌபதி முர்மு, சந்தால் பழங்குடியினத்தைச் சேர்ந்தவராவார்.

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற இரகுராஜ்பூர், பின்வரும் எந்த வகையான ஓவியங்களுக்காக அறியப்படுகிறது?**



அ. மதுபானி

**ஆ. பட்டாச்சித்ரா ☑**

இ. காளிகாட்

ஈ. பகாடி

- ✓ பட்டாச்சித்ரா ஓவியமானது ஒடிஸா மற்றும் மேற்கு வங்காளத்தின் பாரம்பரிய ஓவியமாகும். பாரம்பரிய துணிகளில் அச்சுகளை உருளச்செய்து உருவாக்கும் துணி அடிப்படையிலான ஓவியமான இவை 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். ஹிந்து புராணங்களைச்சித்தரிக்கும் ஜகந்நாதர் / வைஷ்ணவ பிரிவுகளைக் கருப்பொருளாகவும் கொண்ட ஓவியங்கள் இவை. வாடிகன் நகரத்தில், போப் பிரான்சிசுக்கு ஒடிஸா முதலமைச்சர் நவீன் பட்டாச்சித்திரம் ஒன்றை பரிசாக வழங்கியது அடுத்து சமீப செய்திகளில் இது இடம்பெற்றது. பூரி மாவட்டத்தில் உள்ள இரகுராஜ்பூர் கிராமத்தைச்சேர்ந்த கலைஞர் அபிந்த்ரா சுவைன் மற்றும் அவரது குடும்பத்தினரால் இந்தப் பட்டாச்சித்திரம் உருவாக்கப்பட்டது. இரகுராஜ்பூர், பட்டாச்சித்திரம் ஓவியங்களுக்கு உலகப்புகழ்பெற்றதாகும்.

**5. மத்திய தகவல் தொடர்பு பணியகம் முன்பு என்னவாக அறியப்பட்டது?**

அ. தொலைத்தொடர்புத் துறை

ஆ. C-DOT

இ. விளம்பர மற்றும் காட்சி விளம்பர இயக்குநரகம்

**ஈ. வெளிக்கள மற்றும் தொடர்புப் பணியகம் ☑**

- ✓ நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது, வெளிக்கள மற்றும் தொடர்புப் பணியகத்தை (BOC), நடுவண் தகவல்தொடர்புப் பணியகம் எனப்பெயர்மாற்றஞ்செய்துள்ளது. நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பழைய ஊடகப்பிரிவுகள் ஒன்றென இணைந்ததைத் தொடர்ந்து, கடந்த 2017–இல் BOC நிறுவப்பட்டது.

**6. அண்மையில் வெளியிடப்பட்ட, 'ஆயுர்வேத ஆகார்' இலச்சினையானது கீழ்க்காணும் எந்த வண்ணத்தொனியில் வடிவமைக்கப்பட்டுள்ளது?**

அ. சிவப்பு

**ஆ. பச்சை ☑**

இ. நீலம்

ஈ. பழுப்பு

- ✓ ஜூன்.7 அன்று உலக உணவுப்பாதுகாப்பு நாளை முன்னிட்டு, 'ஆயுர்வேத ஆகார்' இலச்சினையை மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார். 'ஆயுர்வேத ஆகார்' என்பது FSSAI விதிமுறைகளின் 'அட்டவணை A'இன் கீழ் உள்ள ஆயுர்வேத நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள செய்முறைகள், பொருட்கள் மற்றும் செயல்முறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஓர் உணவாகும்.
- ✓ பச்சை வண்ணத் தொனியில் வடிவமைக்கப்பட்டுள்ள இதன் இலச்சினையில் தேவநாகரி மற்றும் ஆங்கிலத்தில் 'ஆயுர்வேதம்' மற்றும் 'ஆகார்' என்ற சொற்களின் தொடக்க எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

**7. 'கீர் பவானி மேளா' கொண்டாடப்படுகிற இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. அருணாச்சல பிரதேசம்

**ஆ. ஜம்மு & காஷ்மீர் ☑**

இ. நாகாலாந்து

ஈ. பஞ்சாப்



- ✓ ஜம்மு மற்றும் காஷ்மீரின் கந்தர்பாலில் உள்ள புகழ்பெற்ற ரக்னியா தேவி கோவிலில் வருடாந்திர மாதா 'கீர்பவானி மேளா' தொடங்கியது. காஷ்மீரின் பல்வேறு சமூகங்களுக்கிடையில் பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சாரம் மற்றும் சகோதரத்துவத்தின் சின்னமாக துல்முல்லா ஆலயம் உள்ளது. COVID–19 தொற்றுநோய் காரணமாக ஈராண்டுகளுக்குப்பிறகு இந்த மேளா கொண்டாடப்படுகிறது.

**8. 'Revitalisation: Collective Action for the Ocean' என்பது ஜூன்.8 அன்று கொண்டாடப்பட்ட எந்த நாளின் கருப் பொருளாகும்?**

அ. உலக கடல்வாழ் விலங்குகள் நாள்

**ஆ. உலகப் பெருங்கடல்கள் நாள் ☑**

இ. உலக கடற்கரை நாள்

ஈ. உலக அன்னை பூமி நாள்




✓ பெருங்கடல்களை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் எதிர்காலத்தில் அவற்றை நிலையாகப் பயன்படுத்துவது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐநா அவை ஜூன்.8–ஐ உலகப் பெருங்கடல்கள் நாளாக அறிவித்தது. "Revitalisation: Collective Action for the Ocean" என்பது 2022ஆம் ஆண்டின் உலகப் பெருங்கடல்கள் நாளின் கருப்பொருளாகும். இந்த ஆண்டின் (2022) கருப்பொருள் கடலுக்கு தீங்கு விளைவிப்பதை நிறுத்துவதோடல்லாமல், கூட்டுமுயற்சிகள்மூலம் கடல்சார் மீட்பு நடவடிக்கைகள் குறித்து கவனஞ்செலுத்துகிறது.

**9. மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டமான ககன்யான் மற்றும் சமுத்திரயான் ஆகிய திட்டங்களுக்கு இந்தியா நிர்ணயித்துள்ள இலக்கு ஆண்டு எது?**

அ. 2022

**ஆ. 2023 ☑**

இ. 2024

ஈ. 2025




✓ புவி அறிவியல் அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 2023ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இந்தியா தனது முதல் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் திட்டமான, 'ககன்யான்' மற்றும் 'சமுத்திரயான்' திட்டத்தை தொடங்கும் என்று அறிவித்தார். புது தில்லியில் உலகப் பெருங்கடல்கள் நாள் கொண்டாட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் இதுகுறித்து மேலும் கூறினார். இந்திய அரசாங்கம் விரைவில் நீலப் பொருளாதாரக் கொள்கையை வெளியிடும் என்றும் 2030 ஆம் ஆண்டளவில் கடல்சார் தொழில்களால் சுமார் 40 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என அவர் அறிவித்தார்.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'EASE 5.0 சீர்திருத்தங்கள்' என்பதுடன் தொடர்புடையது எது?**

அ. பல்கலைக்கழகங்கள்

**ஆ. பொதுத்துறை வங்கிகள் ☑**

இ. வானூர்தி நிலையங்கள்

ஈ. காவல் நிலையங்கள்



✓ Enhanced Access and Service Excellence–EASE 5.0 EASE Next திட்டத்தின் 'பொதுச் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல்' சமீபத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் தொடங்கப்பட்டது. பொதுத்துறை வங்கிகளில் சீர்திருத்தங்களுக்காக அவை உருவாக்கப்பட்டுள்ளன. PSB மந்தன், 2022 ஆனது EASENext திட்டத்தை வெளியிட்டது; இது 2 முக்கிய முயற்சிகளை உள்ளடக்கியது; அதாவது EASE 5.0 சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மற்றும் தனிப்பட்ட வங்கியின் வணிக முன்னுரிமைகளின் அடிப்படையில் வங்கியின் குறிப்பிட்ட உத்திசார் 3–ஆண்டு செயல்திட்டமாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆயத்த ஆடை உற்பத்தியில் நாட்டில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு; ஜவுளி உற்பத்தியிலும் இரண்டாம் இடம் வகிக்கிறது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்**

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் இரண்டாவது அதிக பங்களிப்பை வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றார். மொத்த மின்சார உற்பத்தியில், காற்றலை வாயிலாக அதிக பங்களிப்பை வழங்குவதில் தமிழ்நாடு உலக அளவில் ஒன்பதாம் இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிட்டார். கார் உற்பத்தியிலும் உலகின் பத்து பெரிய உற்பத்தி மையங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது.

நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தி நிறுவனங்களில் மூன்றில் ஒரு பகுதி நிறுவனங்கள் அமைந்திருப்பதன்மூலம் தமிழ்நாடு, இந்தியாவின் ஜவுளி பள்ளத்தாக்காகவும், மொத்த நூல் உற்பத்தியில் நாற்பது சதவீதத்தை பெற்றிருப்பதன் மூலம் இந்தியாவின் நூல் கிண்ணமாகவும் திகழ்வதாக கூறினார்.

இந்தியாவில் உள்ள ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்களில் பாதி அளவுக்கு (13,000–ல் 6,500) தமிழ்நாட்டில் இருப்பதுடன், ஆயத்த ஆடை உற்பத்தியில் முதலிடத்திலும், ஜவுளி உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும் இருப்பதாக தெரிவித்தார். 35 சதவீத மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் துறையாக ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை தொழில் துறை திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**புத்தெழுச்சி பெறும் ஜவுளித்தொழில்**

ஜவுளித் தொழில் துறை கொவிட் நெருக்கடியை வாய்ப்பாக மாற்றி, 3 மாத காலத்திற்குள் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராக உருவெடுத்துள்ளது. COVID பாதிப்புக்கு பிந்தைய காலத்தில், ஜவுளி ஏற்றுமதி சாதனை அளவாக 44 பில்லியன் டாலரை எட்டியுள்ள நிலையில், 2025ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலரை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தற்சார்பு இந்தியாவுக்கு மிக முக்கியமாக திகழும் ஜவுளித்துறை, ஏற்றுமதி, வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்றவற்றிலும் முன்னணியில் இருப்பதாக அவர் கூறினார்.

**மாற்றத்தை ஏற்படுத்தும் சீர்திருத்தங்கள்**

ஜவுளித்தொழிலுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை: எம்எம்எஃப் மற்றும் தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு ₹10,683 கோடி மதிப்பிலான ஊக்கத்தொகை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் ஆறு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ.964 கோடி முதலீடும், 12 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்பும், ரூ.14,600 கோடி விற்று வரவும், ரூ. 360 கோடி அளவுக்கு ஊக்கத்தொகை கிடைக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பிரதமரின் மித்ரா பூங்காக்கள்:**

பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆயத்த ஆடை (PM MITRA) பூங்கா திட்டத்தின் கீழ் 7 பூங்காக்களை உலகத்தரம்வாய்ந்த கட்டமைப்புடன், ₹4,045 கோடி மதிப்பீட்டில், 2027–2028க்குள் அமைக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் விருதுநகரில் பிரதமரின் மித்ரா பூங்காவை அமைக்க தமிழ்நாடு அரசு திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஜவுளித் தொழில் பூங்கா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ₹740 கோடி செலவில் 8 பூங்காக்களை அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதில் 4 பூங்காக்களின் பணிகள் முடிவடைந்துள்ளது. 4 இடங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

தமிழ்நாட்டின் கொலப்பலூரில் தொழில்நுட்ப ஜவுளி பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கோவையில் தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி சங்கம் SITRA சார்பில் மெடிடெக் உயர் சிறப்பு மையமும், PSG பொறியியல் கல்லூரியில் இந்து டெக் உயர் சிறப்பு மையமும் அமைக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியுதவி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளில் ₹8,024 கோடி நிதியுதவி மற்றும் ₹595 கோடி மானிய உதவியுடன், சுமார் 6 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விதமாக, மொத்தம் 1405 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சமர்த் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 2 லட்சம் பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இதுவரை ₹1.71 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

**2. திருப்பூர், விழுப்புரத்தில் மினி டைடல் பூங்காக்கள்: முதல்வர் அடிக்கல்**

திருப்பூர், விழுப்புரம் மாவட்டங்களில் ₹76.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மினி டைடல் பூங்காக்களுக்கு முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

டைடல் பூங்காவில் ₹212 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் ₹33.46 கோடியில் அமைக்கப்பட்டு உள்ள 2 சிப்காட் தொழில் புத்தாக்க மையங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

திருப்பூர், விழுப்புரம் மாவட்டங்களில் ₹76.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மினி டைடல் பூங்காக்களுக்கு –ம் காணொலிக்காட்சிமூலம் அடிக்கல் நாட்டினார்.

**இரண்டாவது பொருளாதார மாநிலம்:** 295 பில்லியன் அமெரிக்க டாலர் உள்நாட்டு உற்பத்தி என்ற வகையில், அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

இவற்றோடு மனநிறைவு அடைந்துவிடாமல், 2030–ஆம் ஆண்டில், தமிழகத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ₹78 லட்சம் கோடி) பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்றார்.

---

**2. பத்திரிகையாளர் மாலனுக்கு சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது**

நிகழாண்டு சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்புக்கான விருதுக்கு எழுத்தாளரும், மூத்த பத்திரிகையாளருமான மாலன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சைரஸ் மிஸ்திரி எழுதிய ஆங்கில நாவலான 'குரோனிக்கல் ஆப் கார்ப்ஸ் பியரர்' நூலை 'ஒரு பிணந்தூக்கியின் வரலாற்றுக்குறிப்புகள்' என்ற தலைப்பில் மாலன் தமிழில் மொழிபெயர்த்தமைக்காக இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சாகித்திய அகாதெமி சார்பில் ஆண்டுதோறும் சிறந்த மொழியாக்கப் படைப்புகளுக்கு விருது வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி நிகழாண்டில் 22 இந்திய மொழிகளில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விருது பெற்றோர்க்கு ₹50,000 ரொக்கமும் செப்புப்பட்டயமும் வழங்கப்படவிருக்கிறது.

---

**3. FIFA 17 வயது உலகக்கோப்பை: குரூப் ஏ பிரிவில் இந்தியா**

வரும் அக்டோர் மாதம் நடைபெறவுள்ள FIFA 17 வயது மகளிர் உலகக்கோப்பை போட்டியில் குரூப் ஏ பிரிவில் இந்தியா இடம்பெற்றுள்ளது. சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA), அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு (AIFF) சார்பில் இந்தியாவில் உலகக்கோப்பை கால்பந்து போட்டி வரும் அக்.11 முதல் 30–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. புவனேசுவரம், கோவா, நவி மும்பை உள்ளிட்ட 3 நகரங்களில் நடைபெறும் இப்போட்டியில் மொத்தம் 16 அணிகள் கலந்துகொள்கின்றன.

**குரூப் ஏ பிரிவில் இந்தியா:**

போட்டியை நடத்தும் இந்தியா, குரூப் ஏ பிரிவில் வலுவான அமெரிக்கா, பிரேசில், மொராக்கோ உள்ளிட்ட நாடுகளுடன் இடம்பெற்றுள்ளது. குரூப் பி பிரிவில் ஜெர்மனி, நைஜீரியா, சிலி, நியூசிலாந்தும், குரூப் சி பிரிவில் ஸ்பெயின், கொலம்பியா, மெக்ஸிகோ, சீனாவும், குரூப் டி பிரிவில் ஜப்பான், தான்சானியா, கனடா, பிரான்ஸ் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

---

**4. NITI ஆயோக்கின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக பரமேஸ்வரன் நியமனம்!**

NITI ஆயோக் தலைமை நிர்வாக அதிகாரியாக பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக கடந்த 2015இல் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு உருவாக்கிய அமைப்பு NITI ஆயோக். தேசிய வளர்ச்சிக் கொள்கைகளை இது பரிந்துரை செய்கிறது.

இதன் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கும் அமிதாப் காந்தின் பதவிக்காலம் வருகிற ஜூன்.30 அன்று நிறைவடைவதையடுத்து, பரமேஸ்வரன் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் அறிவிப்பின்படி, ஆரம்ப பதவிக்காலமாக ஈராண்டுகள் பதவிவகிப்பார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. G7 மாநாடு: பிரதமர் மோடி ஜெர்மனி பயணம்**

G7 மாநாட்டில் பங்கேற்க விரைவில் பிரதமர் மோடி ஜெர்மனி செல்லவுள்ளார்.

ஜெர்மனி அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸின் அழைப்பின் பேரில் G7 மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் மோடி விரைவில் ஜெர்மனி செல்கிறார். ஜுன்.26, 27 தேதிகளில் நடக்கும் மாநாட்டில் சுற்றுச்சூழல், பருவநிலை, எரிசக்தி, உணவுப் பாதுகாப்பு, பாலின சமத்துவம், குடியரசு மற்றும் சர்வதேச உறவு ஆகியவை குறித்து விவாதிக்கப்படும் என இந்திய வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்க அர்ஜெண்டினா, இந்தோனேசியா, செனகல் மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

---

**6. வங்கதேசத்தின் நீளமான பாலம்**

வங்கதேசத்தில் பத்மா நதியின் குறுக்கே சுமார் ₹2,700 கோடியில் கட்டப்பட்ட 6.15 கி.மீ. நீளம் கொண்ட பாலத்தை பிரதமர் ஷேக் ஹசீனா திறந்துவைத்தார். தலைநகரம் டாக்காவையும் நாட்டின் தென்மேற்குப் பகுதியையும் இணைக்கும் வகையில் பத்மா நதியின் குறுக்கே சாலை–ரயில் பாலமாக இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. வெளிநாடுகளின் நிதியுதவி ஏதுமின்றி இந்தப் பாலத்தை வங்கதேச அரசு கட்டியுள்ளது. நாட்டின் மிகநீண்ட இந்தப் பாலத்தை பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

---

**1. ஐநா பொதுச்சேவை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. ஜூன்.18

ஆ. ஜூன்.21

**இ. ஜூன்.23 ☑**

ஈ. ஜூன்.25

✓ உலகெங்கிலும் உள்ள அனைத்து துறைகளின் வளர்ச்சியை உறுதிசெய்வதில் அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு ஊழியர்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக ஐநா பொதுச்சேவை நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.23 அன்று அனுசரிக்கப்படுகிறது. "Building back better from COVID-19: Enhancing innovative partnerships to meet the Sustainable Development Goals" என்பது 2022-இல் அனுசரிக்கப்பட்ட இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**2. ஐநா அவையின் பொதுச்சேவை விருதுகளால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட, 'மோ பேருந்து சேவை'யை தொடங்கிய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ. தெலுங்கானா

ஆ. புது தில்லி

இ. மேற்கு வங்கம்

**ஈ. ஒடிஸா ☑**

✓ ஒடிஸாவின் தலைநகர மண்டல நகர்ப்புற போக்குவரத்து (CRUT) ஆணையம், பெண் பயணிகளுக்கான நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக 'மோ பேருந்து சேவை'யை கடந்த 2018 நவம்பரில் அறிமுகப்படுத்தியது. நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான ஐநா-இன் பொதுச்சேவை விருதுகளால் இந்தச் சேவை அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது.

**3. இந்தியா அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து 'காமன்வெல்த் டிப்ளமேடிக் அகாடமி' திட்டத்தை அறிவித்தது?**



அ. ஆஸ்திரேலியா

**ஆ. இங்கிலாந்து ☑**

இ. இத்தாலி

ஈ. பிரான்ஸ்

✓ இங்கிலாந்து (UK) மற்றும் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர்களால் இந்தியா-இங்கிலாந்து இணைந்த கூட்டுத் திட்டமான, 'காமன்வெல்த் டிப்ளமேடிக் அகாடமி' திட்டம் அண்மையில் அறிவிக்கப்பட்டது. அனைத்து காமன்வெல்த் உறுப்புநாடுகளின் தூதரக அதிகாரிகளை உலக அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தும் வளர்ந்துவரும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான திறன்களில் நிபுணத்துவம் வாய்ந்தவராக மாற்றுவதற்கு இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அகாடமி நிகழ்வு புதுதில்லியில் நடத்தப்படும்.

✓ ஜூன்.24 முதல் ஜூன்.25 வரை கிழக்கு ஆப்பிரிக்காவின் ருவாண்டாவில் நடைபெற்ற 26ஆவது காமன்வெல்த் அரச தலைவர்கள் மாநாட்டின்போது (CHOGM) இது அறிவிக்கப்பட்டது.

**4. நார்கோடிக் மருந்துகள் மற்றும் உளச்சார்புள்ள பொருட்கள் சட்டம், 1985 ஆனது எந்த மத்திய அமைச்சகத்தின் அதிகார வரம்பிற்கு (ஜூன் 2022 நிலவரப்படி) உட்பட்டதாக உள்ளது?**

**அ. நிதி அமைச்சகம் ☑** ஆ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம் ஈ. சட்டம் & நீதி அமைச்சகம்

वित्त मंत्रालय
MINISTRY OF FINANCE
सत्यमेव जयते

✓ நிதியமைச்சகத்தின்கீழ் உள்ள வருவாய்த்துறை, 1985ஆம் ஆண்டின் நார்கோடிக் மருந்துகள் மற்றும் உளச்சார்புள்ள பொருட்கள் சட்டத்தை நிர்வகிக்கிறது. இந்தச் சட்டத்தின் நிர்வாகத்தை நிதியமைச்சகத்திடம் இருந்து நடுவண் உள்துறை அமைச்சகத்திற்கு மாற்ற நடுவணரசு திட்டமிட்டு, போதைப்பொருள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளையும் ஒரே துறையின்கீழ் கொண்டுவர எண்ணுகிறது.

**5. 'MEDISEP' என்ற விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவிக்கவுள்ள மாநிலம் எது?**

**அ. கேரளா ☑**

ஆ. பீகார்

இ. குஜராத்

ஈ. மத்திய பிரதேசம்

✓ கேரள மாநில அரசு MEDISEP திட்டத்தை 2022 ஜூலை.1 முதல் தொடங்கவுள்ளது. இது மாநில அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர் மற்றும் அவர்களது தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாகும். இது ஆண்டுக்கு ₹3 இலட்சம் வரையிலான விரிவான காப்பீட்டுடன் இலவச மருத்துவ உதவியை வழங்கும்.

**6. 'உலக முதலீட்டு அறிக்கை' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் முதன்மை அறிக்கையாகும்?**

அ. IMF

ஆ. உலக வங்கி

**இ. UNCTAD ☑**

ஈ. WTO




✓ அதன் சமீபத்திய உலக முதலீட்டு அறிக்கையில், வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐநா அமைப்பு (UNCTAD) இந்தியாவுக்கான அந்நிய நேரடி முதலீடு முந்தைய ஆண்டில் இருந்த $64 பில்லியன் டாலரிலிருந்து 2021–இல் $45 பில்லியன் டாலராக குறைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. 2021 ஆங்கில ஆண்டில் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) அதிகமாகப் பெறும் நாடுகளுள் இந்தியாவின் தரவரிசை ஓரிடம் முன்னேறி 7ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அமெரிக்கா ($367 பில்லியன்) அந்நிய நேரடி முதலீட்டில் முதலிடத்தில் உள்ளது.

**7. 2022–இல் ஐநா குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க்கால் குளோபல் SDG முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?**

**அ. இராமகிருஷ்ணா முக்கவில்லி ☑**

ஆ. P V சிந்து

இ. யாஷ் துல்

ஈ. சுமந்த் சின்ஹா



✓ ஐதராபாத்தைச் சார்ந்த துளிர் நிறுவனமான மைத்ரி அக்வாடெக்கின் தலைவரான ராமகிருஷ்ணா முக்கவில்லி, ஐநா குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க்கால் (UNGC) குளோபல் SDG முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2022ஆம் ஆண்டிற்கான 10 புதிய SDG முன்னோடிகளில் ஒருவராக UNGCஆல் அங்கீகரிக்கப்பட்ட முதல் இந்தியர் இவர். முன்னதாக ஐக்கிய நாடுகள் குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க் இந்தியாவால் இந்தியாவின் SDG முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வளிமண்டல நீர் உற்பத்தியைப் பயன்படுத்தி, அவரது நிறுவனம் வளியிலிருந்து 100 மில்லியன் லிட்டர் தூய நீரை உருவாக்கியுள்ளது.

**8. இங்கிலாந்தால், 'Companion of Honour' என்று அறிவிக்கப்பட்ட இந்திய எழுத்தாளர் யார்?**



அ. இரஸ்கின் பாண்ட் **ஆ. சல்மான் ருஷ்டி ☑**

இ. அருந்ததி ராய் ஈ. விக்ரம் சேத்

✓ இந்திய எழுத்தாளரான சல்மான் ருஷ்டி, இலக்கியத்திற்கான சேவைகளுக்காக இங்கிலாந்து, 'மரியாதைக்குரிய தோழராக' அறிவிக்கப்பட்டார். இராணியின் பவள விழாவைக் குறிக்கும் நான்கு நாட்கள் கொண்டாட்டத்தின்போது 'மிட்நைட்ஸ் சில்ட்ரனின்' ஆசிரியரான சல்மான் ருஷ்டி கௌரவிக்கப்பட்டார். அவர் இதற்கு முன்பு கடந்த 2007–இல் 'நைட்ஹூட்' பட்டம் பெற்றார். 'கம்பேனியன் ஆப் ஹானர்' என்பது இலக்கியத்திற்கான சேவைகளுக்காக எந்த நேரத்திலும் 65 பேர் மட்டுமே உறுப்பினர்களாக இருக்கும் ஒரு பிரத்யேக குழுமம் ஆகும்.

**9. பன்னாட்டு செலவாணி நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**



அ. உர்ஜித் படேல்


ஆ. நிர்மலா சீதாராமன்

**இ. கிருஷ்ணா சீனிவாசன் ☑**

ஈ. வைரல் ஆச்சார்யா

✓ பன்னாட்டு செலவாணி நிதியத்தின் (IMF) ஆசிய மற்றும் பசிபிக் துறையின் இயக்குநராக இந்தியாவைச் சார்ந்த கிருஷ்ணா சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். IMFஇல் 27 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்த அவர், சிறிய பசிபிக் மாகாணங்களான பிஜி மற்றும் வனுவாட்டு மற்றும் சீனா மற்றும் கொரியாபோன்ற அமைப்பு ரீதியாக முக்கியமான நாடுகளின் மீதான துறையின் கண்காணிப்புப் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

**10. 'தயா பே அணுவுலை நியூட்ரினோ பரிசோதனையகம்' செயல்படுகிற நாடு எது?**



**அ. சீனா ☑**

ஆ. உருசியா

இ. இஸ்ரேல்

ஈ. ஆஸ்திரேலியா

✓ தயா விரிகுடா அணுவுலை நியூட்ரினோ பரிசோதனையகமானது சீனாவின் குவாங்டாங்கில் செயல்பட்டு வருகிறது. இது ஹாங்காங்கிலிருந்து வடகிழக்கே சுமார் 52 கிமீ தொலைவில் தயா விரிகுடாவில் அமைந்துள்ளது. பன்னாட்டு ஒத்துழைப்பின்கீழ் சீனா, சிலி, அமெரிக்கா, தைவான், உருசியா மற்றும் செக் குடியரசு ஆராய்ச்சியாளர்கள் இங்கு பணியில் உள்ளனர். இதன் உணர்கருவிகள் அருகிலுள்ள அணுமின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து ஸ்ட்ரீமிங் செய்யும் ஆன்டிநியூட்ரினோக்களால் உருவாக்கப்பட்ட ஒளி சமிக்ஞைகளை பெற்றுக்கொள்கின்றன.

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சுகாதாரக் கட்டமைப்பு: தமிழநாட்டுக்கு ₹404 கோடி: மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா**

தமிழ்நாட்டின் சுகாதார உட்கட்டமைப்புத் திட்டத்துக்காக மத்திய அரசு ₹404 கோடி ஒதுக்கியுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

தமிழகத்தில் செலுத்தப்பட்டுள்ள 11 கோடியே 26 லட்சம் கரோனா தடுப்பூசிகளில் 94 சதவீதம் முதல் தவணை, 82 சதவீதம் இரண்டாவது தவணை.

**காசநோய் பாதிப்பு:** 2025–ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், பொதுநோக்கம் உள்ள எந்த ஒரு நபரும், அரசு சாராத அல்லது அரசு சார்ந்த, தனியார் மற்றும் அரசு நிறுவனங்களைச் சேர்ந்த தனிநபர்கள் காசநோயாளிகளைத் தத்தெடுக்கலாம்.

தமிழ்நாட்டின் 17 மாவட்டங்களில் மலேரியா பாதிப்பு இல்லை. யானைக்கால் நோயை தமிழ்நாடு முற்றிலும் ஒழித்துள்ளது.

**தேசிய டயாலிசிஸ் திட்டம்:** 2030–ஆம் ஆண்டுக்குள் நாட்டிலிருந்து மலேரியாவை முற்றிலும் ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது. பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின்கீழ், 'ஒரே தேசம் ஒரே டயாலிசிஸ்' திட்டத்தை பிரதமர் விரைவில் தொடக்கிவைப்பார். அதன்மூலம், டயாலிசிஸ் தேவை ஏற்படும் நோயாளி, நாட்டின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் அந்த வசதியைப்பெற முடியும்.

ஆயுஷ்மான் பாரத் – சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் திட்டத்தின் கீழ் 2022, டிசம்பருக்குள் 9,135 சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது 7,052 மையங்கள் (ஜூன் 2022 வரை) அந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. இந்த மையங்களில் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், பொதுவான புற்றுநோய் உள்ளிட்டவற்றுக்கு இதுவரை (மார்ச் 2022 வரை) 542.07 இலட்சம் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

---

**2. முகக்கவசம் அணியாவிடில் அபராதம்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு**

முகக்கவசம் அணியாதவர்கள், COVID நோய்த்தடுப்பு விதிகளைக் கடைப்பிடிக்காதோர்க்கு அபராதம் விதிக்கப்படும்.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் இருப்பவர்களிடமும், COVID–19 வழிமுறைகளை முறையாக கடைப் பிடிக்காதவர்கள் மீதும் தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு பொதுச்சுகாதாரச்சட்டம், 1939–இன்படி இனி அபராதம் விதிக்கப்படும்.

---

**1. $600 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான உலகளாவிய உட்கட்டமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்திய கூட்டமைப்பு எது?**

அ. BRICS

**ஆ. G7 ☑**

இ. G20

ஈ. ஐரோப்பிய ஒன்றியம்

✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் பிற G7 தலைவர்கள் ஜெர்மனியில் உள்ள சுக்லோஸ் எல்மாவ் என்ற இடத்தில் நடைபெற்ற வருடாந்திர கூட்டத்தில், 'உலகளாவிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான கூட்டாண்மை'யை மீண்டும் தொடங்கினர். இது வளரும் நாடுகளின் உட்கட்டமைப்புக்கு நிதியளிப்பதற்கும், சீனாவின் பட்டை மற்றும் பாதை திட்டத்தை எதிர்ப்பதற்கும் 5 ஆண்டுகளில் $600 பில்லியன் டாலர்களை தனியார் மற்றும் பொது நிதியில் திரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ ஐந்து ஆண்டுகளில் அமெரிக்கா $200 பில்லியன் டாலர்களை மானியங்கள், கூட்டாட்சி நிதிகள் மற்றும் தனியார் முதலீட்டில் திரட்டும், ஐரோப்பா 300 பில்லியன் யூரோக்களை திரட்டும்.

**2. 'EIU உலகளாவிய வாழத்தகுந்த நகரங்கள் குறியீட்டின்'படி, உலகில் மிகவும் வாழத்தகுந்த நகரம் எது?**

அ. லண்டன்

**ஆ. வியன்னா ☑**

இ. நாகர்கோவில்

ஈ. ஜெனிவா

✓ Economist Intelligence Unit (EIU) ஆனது, 2022ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரங்களின் (Global Liveability Index) வருடாந்திர தரவரிசையை வெளியிட்டது. உட்கட்டமைப்பு, அரசியல் நிலைத்தன்மை, குற்ற விகிதங்கள் & பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் மொத்தம் 173 நகரங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. வியன்னா (ஆஸ்திரியா), கோபன்ஹேகன் (டென்மார்க்) மற்றும் சூரிச் (சுவிச்சர்லாந்து) ஆகியவை இந்தக்குறியீட்டில் முதல் மூன்று இடங்களில் உள்ள நகரங்களாகும்.

**3. 'குறு–சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. ஜூன்.18

ஆ. ஜூன்.21

**இ. ஜூன்.27 ☑**

ஈ. ஜூன்.30




✓ ஜூன் 27, குறு–சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSMEs) நாளாகக் கொண்டாடப்படுகிறது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு MSME–களின் பங்களிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டது இந்த நாள். ஐநா பொதுச்சபையானது 2017ஆம் ஆண்டு இந்நாளை அறிவித்தது.

**4. 'சுல்ஜானா' என்ற திட எரிபொருளில் இயங்கும் ஏவுகணையை ஏவியுள்ள நாடு எது?**

அ. இஸ்ரேல் **ஆ. ஈரான் ☑**

இ. ரஷ்யா ஈ. வட கொரியா



✓ ஈரான், 'சுல்ஜானா' என்ற பெயரில் திட எரிபொருளில் இயங்கும் ஏவுகணையை விண்ணில் செலுத்தியுள்ளது. 25.5 மீ நீளமுள்ள இந்த ஏவுகணை, 220 கிலோ எடையுள்ள செயற்கைக்கோளை சுமந்துசெல்லும் திறன்கொண்டது. இச்செயற்கைக்கோள்கள் பூமியின் தாழ்சுற்றுப்பாதையில் தரவுகளைச் சேகரிக்கும். முகமது நபியின் பேரனான இமாம் ஹுசைனின் குதிரையின் பெயர் 'சுல்ஜானா' ஆகும்.

**5. NITI ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரியாக (அமிதாப் காந்த்க்குப் பிறகு) நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. உர்ஜித் படேல்

ஆ. சுபாஷ் சந்திர கார்க்

**இ. பரமேஸ்வரன் ☑**

ஈ. ராஜேஷ் பன்சால்

✓ 1981ஆம் ஆண்டு உத்தரபிரதேச தொகுதியின் இஆப அதிகாரியான பரமேஸ்வரன், NITI ஆயோக்கின் தலைமைச் செயலதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அரசாங்கத்தின் தூய்மை இந்தியா இயக்கத்தை வழிநடத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் முன்னாள் செயலாளரும் ஆவார் இவர். இந்த ஆண்டு ஜூன்.30ஆம் தேதி ஓய்வுறும் அமிதாப் காந்த்க்குப் பிறகு புதிய தலைமைச் செயலதிகாரி அவர் பதவியேற்றார்.

**6. கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அணு எரிபொருளை வழங்கிய நாடு எது?**

அ. அமெரிக்கா

**ஆ. ரஷ்யா ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. சீனா



✓ கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அலகு 1 & 2–க்கு, ரஷ்யாவின் ரோசாட்டம் ஸ்டேட் கார்ப்பரேஷன், ஏற்கனவே உள்ளதைவிட நம்பகமான மற்றும் மலிவான அணு எரிபொருளின் முதல் தொகுதிகளை வழங்கியது. தற்போதுள்ள எரிபொருள் 'TVS–2M அணு எரிபொருள்' ஆகும். அது தீர்ந்தவுடன் இந்தப் புதிய எரிபொருள் நிரப்பப்படும். அதன்பின், அணுமின்னுற்பத்தி அலகு–1 18 மாத எரிபொருள் சுழற்சியில் செயல்படத் தொடங்கும்.

**7. உலக வர்த்தக அமைப்பின் (WTO) 12ஆவது அமைச்சர்கள் மாநாடு (MC12) நடைபெறும் இடம் எது?**

**அ. ஜெனிவா ☑**

ஆ. டோக்கியோ

இ. நியூயார்க்

ஈ. பாரிஸ்

✓ ஜெனிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் (WTO) 12ஆவது அமைச்சர்கள் மாநாட்டில் (MC12) இந்தியா சார்பில் மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் கலந்துகொண்டார். MC12–இன் முழுமையான அமர்வில் அமைச்சர் பேசுகையில், உணவுப்பாதுகாப்பிற்கான பொது இருப்புப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண்பது முதன்மையான முன்னுரிமையாக இருக்கவேண்டும் எனக்கூறினார். 2021–இல் WTOஇல் நிரந்தர பங்கு வைத்திருப்பதற்கான தீர்வுக்கான G–33 திட்டத்திற்கு இந்தியா இணை அனுசரணை வழங்கியது.

**8. விண்வெளியில் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்தை அறிவித்துள்ள நாடு எது?**

அ. இந்தியா ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

**இ. சீனா ☑** ஈ. தென் கொரியா



✓ புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின் ஒருபகுதியாக, 2028ஆம் ஆண்டில் வற்றாத மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை விண்வெளியில் தொடங்க திட்டமிட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

✓ முன்னதாக, 2030ஆம் ஆண்டுக்குள் 1 MW சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை விண்வெளியில் நிறுவ சீனா இலக்கு வைத்துள்ளது. 400 கிமீ உயரத்திலிருந்து தரைக்கு கம்பியில்லா மின்சாரப் பரிமாற்ற தொழில்நுட்பத்தைச் சோதிக்க 2028ஆம் ஆண்டில் சீனா ஒரு செயற்கைக்கோளை ஏவவுள்ளது. இது சூரிய ஆற்றலை நுண்ணலை அல்லது லேசர் அலைகளாக மாற்றும்.

**9. இந்தியக் கடற்படையின் எந்த உள்நாட்டு ஏவுகணை தாங்கிக்கப்பல் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது?**

அ. INS விக்ராந்த்

**ஆ. INS குக்ரி ☑**

இ. INS கட்டபொம்மன்

ஈ. INS ஷிவாலிக்




✓ இந்தியக் கடற்படையின் முதல் உள்நாட்டு ஏவுகணையான INS குக்ரி (P49), தேசத்திற்கும் கடற்படைக்கும் 32 ஆண்டுகள் சேவையாற்றிய பிறகு, கப்பல் அருங்காட்சியகமாக மாற்றப்படுவதற்காக டையூ நிர்வாகத்திற்குக்கொண்டு செல்லப்பட்டது. சமீபத்தில் குக்ரி அருங்காட்சியகத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா திறந்துவைத்தார். புதிதாக திறக்கப்பட்ட இக்கப்பல் அருங்காட்சியகமும் தற்போதுள்ள INS குக்ரி நினைவகமும் டையூவில் உள்ளன.

**10. "United in Making Our Voice Heard" என்பது 2022 ஜூனில் கடைப்பிடிக்கப்படும் எந்த உலக நாளின் கருப்பொருளாகும்?**

**அ. உலக அல்பினிசம் விழிப்புணர்வு நாள் ☑**

ஆ. வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளின் உலக நாள்

இ. குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாள்

ஈ. உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நாள்




✓ ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது கடந்த 2015இல் ஜூன்.13ஆம் தேதியை உலக அல்பினிசம் விழிப்புணர்வு நாள் என அறிவித்தது. அல்பினிசம் உள்ளவர்களின் உரிமைகள்பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது ஒரு பிறவிக்கோளாறு ஆகும். இது தோல், கண்கள் மற்றும் முடியில் நிறமி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இல்லாததால் ஏற்படுகிறது. "United in Making Our Voice Heard" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளிற்கான கருப்பொருளாகும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2022 ஜூன்.29 அன்று புள்ளியியல் தினம் கொண்டாடப்படவுள்ளது**

பொருளாதார திட்டமிடல் மற்றும் புள்ளியியல் துறைக்கு மறைந்த பேராசிரியர் பிரசந்த சந்திர மகாலனோபிஸ் வழங்கிய மதிப்புமிகு பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அவரது பிறந்தநாளான ஜூன்.29 ஒவ்வோர் ஆண்டும் புள்ளியியல் நாளாக மத்திய அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டின் சமூக–பொருளாதார திட்டமிடல், வளர்ச்சிக்கான கொள்கை வகுத்தல் ஆகியவற்றில் புள்ளியியலின் பங்களிப்பும், முக்கியத்துவமும் குறித்து பொதுமக்களிடையே குறிப்பாக இளந்தலைமுறையினரிடையே விழிப்பு உணர்வை ஏற்படுத்தியது புள்ளியியல் நாளின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மையப்பொருளில் இந்த விழா கொண்டாடப்படும். இந்த ஆண்டு "நீடித்த வளர்ச்சிக்கான தரவுகள்" என்பது மையப்பொருளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**2. மாணவிகளுக்கு மாதம் ₹1,000: விண்ணப்பிக்க தனி இணையதளம்**

பட்டப்படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் தொடர்பான விவரம்பெற கட்டணமில்லாத தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க பிரத்யேக இணையதளமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சான்றிதழ் படிப்பு, பட்டயம், பட்டம், தொழிற்கல்வி ஆகியன படிக்கும் மாணவிகளுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின்கீழ், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அரசுப்பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயின்று இருக்க வேண்டும். கல்வி உரிமைச்சட்டத்தின்கீழ், தனியார் பள்ளியில் 6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயின்று அதன்பின்பு 9 முதல் பிளஸ் 2 வரை அரசுப் பள்ளியில் படித்த மாணவிகளும் இந்த நிதியுதவித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

அரசுப் பள்ளிகள் எவை? ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், நகராட்சிப்பள்ளிகள், மாநகராட்சிப்பள்ளிகள், பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீர்மரபினப்பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பள்ளிகள், வனம், சமூக பாதுகாப்புத் துறைகளின் பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவிகளும் நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.

எந்தெந்த படிப்புகள்? எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்புகளில் படித்து பின்னர் முதன்முறையாக உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் படிப்புக்கு மட்டுமே திட்டம் பொருந்தும். ஐடிஐ., ஆசிரியர் பட்டயப்படிப்பு, பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பிபிஏ., பிசிஏ, உள்பட அனைத்து கலை மற்றும் அறிவியல், கவின்கலை கல்லூரி பாடங்கள், பிஇ., பி.டெக்., எம்.பி.பி.எஸ்., பிடிஎஸ்., பி.எஸ்.சி., (வேளாண்மை), இளங்கலை கால்நடை அறிவியல், சட்டம், இணை மருத்துவப்படிப்புகள் (நர்சிங், பார்மஸி, பிசியோதெரபி) ஆகியன படிக்கும் மாணவிகள் விண்ணப்பிக்கலாம்.

**இரண்டாம், மூன்றாம் ஆண்டுகள்:** தொலைதூரக்கல்வி மற்றும் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகளுக்கு இத்திட்டம் பொருந்தாது. நிகழ் கல்வியாண்டில் மாணவிகள் புதிதாக மேற்படிப்பில் முதலாமாண்டு சேர்ந்த பின்னர், இணையதளம் வழியாக இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பம் செய்யலாம்.

மேலும், முதலாம் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டு செல்லும் மாணவியரும், இரண்டாம் ஆண்டில் இருந்து மூன்றாம் ஆண்டு செல்வோரும் விண்ணப்பிக்கலாம். தொழில் மற்றும் மருத்துவப்படிப்புகளில் இறுதி ஆண்டு செல்லும் மாணவிகளும் இந்தத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

கடந்த கல்வியாண்டில் (2021–22) இறுதியாண்டு பயிலும் மாணவிகள் இந்தத்திட்டத்தின்கீழ் பயனடைய இயலாது. இந்த மாணவிகள் ஒரு சில மாதங்களில் தங்களது படிப்பை நிறைவு செய்வர். இந்தத்திட்டத்தின்கீழ், இளநிலை படிப்பு பயிலும் மாணவிகள் மட்டுமே பயனடைய முடியும். முதுநிலை படிப்பு பயிலும் மாணவிகள் பயன்பெற இயலாது. இந்தத் திட்டத்தின் பயன்பெறுவது குறித்து தங்களுக்குத் தேவையான தெளிவுரைகள், கூடுதல் விவரங்களை கட்டணமில்லாத தொலைபேசி (14417) எண்ணை தொடர்புகொண்டு பெறலாம் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1. 'India's Booming Gig and Platform Economy' என்ற தலைப்பில் அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

ஆ. உலக தொழிலாளர் அமைப்பு

**இ. NITI ஆயோக் ☑**

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ "இந்தியாவில் பெருகிவரும் வேலைவாய்ப்பு மற்றும் சாலையோர பொருளாதாரம்" என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்றை NITI ஆயோக் வெளியிட்டுள்ளது. இந்திய சாலையோர தொழில்புரிகுவோரின் எண்ணிக்கை 2029–30 ஆம் ஆண்டுக்குள் 23.5 மில்லியனாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது; அது தற்போதுள்ள 7.7 மில்லியனை ஒப்பிடும்போது 200 சதவீதம் அதிகமாகும். 2029–2030–க்குள் இந்தியாவில் உள்ள மொத்த பணியாளர்களில் இவர்களின் சதவீதம் மட்டும் 4.1 சதவீதத்தைக் கொண்டிருக்கும் என இவ்வறிக்கை மதிப்பிடுகிறது; அது தற்போது 1.5 சதவீதமாக உள்ளது.

**2. மாவட்டங்களுக்கான செயல்திறன் தர அட்டவணையை (PGI–D) வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?**

அ. MSME அமைச்சகம்

ஆ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**இ. கல்வி அமைச்சகம் ☑**

ஈ. ஜல் சக்தி அமைச்சகம்

✓ கல்வி அமைச்சகமானது 2019–20ஆம் ஆண்டிற்கான மாவட்டங்களுக்கான செயல்திறன் தரவரிசை குறியீட்டை (PGI–D) வெளியிட்டது. மேலும், இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகள் டிஜிட்டல் கற்றல் வகையின்கீழ் மிகமோசமாக செயல்பட்டதாக அது குறிப்பிட்டது. இராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர், சிகார் மற்றும் ஜுஞ்சூனு மாவட்டங்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளன. PGI–D அமைப்பு ஆறு வகைகளின்கீழ் 600 புள்ளிகளைக்கொண்டு இதனை தயார் செய்துள்ளது.

**3. கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைக்காகமானது கீழ்க்காணும் எந்த நகரத்தில் 'One Health – ஒரு சுகாதாரம்' என்ற முன்னோடித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது?**

அ. சென்னை

**ஆ. பெங்களூரு ☑**

இ. ஆமதாபாத்

ஈ. மைசூர்

✓ நடுவண் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை, இந்திய அரசின் மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து 'ஒரு சுகாதார' முன்னோடித் திட்டத்தை செயல்படுத்தவுள்ளன.

✓ மனிதர்கள், விலங்குகள் எதிர்கொள்ளும் சுகாதாரப்பிரச்சனைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஒரே தளத்தில் எதிர்கொள்வதற்கான இம்முன்னோடித் திட்டம், பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, இந்திய தொழில்கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையால் கர்நாடகா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்படவுள்ளன.

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற T–ஹப் என்பது எந்த மாநிலத்தில் உள்ள துளிர் நிறுவன அடைவகமாம்?**

அ. தமிழ்நாடு **ஆ. தெலுங்கானா ☑**

இ. திரிபுரா ஈ. கர்நாடகா

✓ தெலுங்கானா மாநில முதலமைச்சர் K சந்திரசேகர் இராவ் அண்மையில் ஹைதராபாத்தில் 'T–ஹப்' என்ற வணிக அடைவகத்தை திறந்து வைத்தார். 'T–Hub 2.0' என்று அழைக்கப்படும் இந்தப் புதிய கட்டிடம், உலகின் மிகப்பெரிய புத்தாக்க வளாகம் எனக் கூறப்படுகிறது. இந்த வசதி ஒரே கூரையின் கீழ் 2,000 துளிர்நிறுவல்களை ஆதரிக்கும். கடந்த 2015இல் நிறுவப்பட்ட, T–ஹப் (தொழில்நுட்ப மையம்) என்பது ஹைதராபாத் நகரத்தைச் சார்ந்த ஒரு புத்தாக்க மையமாகும்.

**5. 2023–இல் G20 உச்சிமாநாட்டை நடத்தும் இந்திய மாநிலம்/UT எது?**

அ. கேரளா

**ஆ. ஜம்மு காஷ்மீர் ☑**

இ. ஒடிஸா

ஈ. சிக்கிம்

✓ 2023இல் இந்தியா நடத்தும் G20 உச்சிமாநாட்டின்போதான கூட்டங்களுக்கு ஜம்மு மற்றும் காஷ்மீரை வெளியுறவு அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசாங்கம் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பிற்காக ஐந்துபேர் கொண்ட உயரதிகாரங்கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது. யூனியன் பிரதேசத்தில் நடைபெறும் முதல் G20 கூட்டங்களாம் இவை. ஜம்மு–காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து இரத்துசெய்யப்பட்ட பிறகு அங்கு நடைபெறும் முதல் சர்வதேச மாநாடு இதுவாகும்.


**6. விரிவான புற்றுநோய் கண்டறியும் சேவைகளுக்காக நாட்டின் முதல் புற்றுநோயியல் ஆய்வகத்தை தொடக்கிய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. குஜராத்

ஈ. கர்நாடகா



✓ விரிவான புற்றுநோய் கண்டறியும் சேவைகளுக்கான நாட்டின் முதல் புற்றுநோயியல் ஆய்வகமான புற்றுநோய் கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்தார். கார்கினோஸ் ஹெல்த்கேரின் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சிக்கான இம்மேம்பட்ட மையம் ஒரு மைய ஆய்வகமாக செயல்படும். தொடக்ககால நோயறிதல் கருவிகள், துல்லியமான மருத்துவத்திற்கான மூலக்கூறு மதிப்பீடுகள் ஆகியவற்றில் கவனஞ்செலுத்தப்படுகிறது. TATA குழுமம் ₹110 கோடியை கார்கினோஸில் முதலீடு செய்கிறது. இரகுடென் மெடிக்கல், மேயோ கிளினிக் மற்றும் ரிலையன்ஸ் டிஜிட்டல் ஹெல்த் முதலானவை மற்ற பங்குதாரர்கள் ஆகும்.

**7. 'இந்திய இரயில்வேக்கான புதுமைக்கொள்கையின்'படி, கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும் மானியத்தின் அதிகபட்ச வரம்பு என்ன?**

அ. ரூ.10 இலட்சம்

ஆ. ரூ.25 இலட்சம்

இ. ரூ.50 இலட்சம்

**ஈ. ரூ 1.5 கோடி ☑**

✓ துளிர்–நிறுவல்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், 'இந்திய இரயில்வேக்கான புதுமைக்கொள்கை'யை அறிமுகப்படுத்தினார். 'இரயில்வேக்கான துளிர்–நிறுவல்கள்' என்றும் குறிப்பிடப்படும் இந்தக் கொள்கையானது ₹1.5 கோடி மதிப்பில் சம பகிர்வு அடிப்படையில் கண்டுபிடிப்பாளர்களுக்கு மூலதன மானியத்தை வழங்கும்.

**8. தொற்றுநோய் காலத்தில் இந்தியாவிலிருந்து அரிசியை அதிகம் வாங்கிய நாடு எது?**



அ. மாலத்தீவுகள் ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

**இ. சீனா ☑** ஈ. தென் கொரியா

✓ 2021–22 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதியில் 16.34 லட்சம் மெட்ரிக் டன்கள் (LMT) அல்லது 7.7 சதவீதத்தை இறக்குமதி செய்து, தொற்றுநோய்களின்போது இந்திய அரிசியை அதிக அளவில் வாங்கிய நாடாக சீனா உருவெடுத்தது. 2021–22இல், இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதி (பாசுமதி மற்றும் பாசுமதி அல்லாத இரண்டும்) 212.10 LMT ஆக இருந்தது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சீனாவின் மொத்த அரிசியில், கிட்டத்தட்ட 97% உடைந்த அரிசியாகும்; இது அந்த நாட்டின் அதீத தேவையை உணர்த்துகிறது. இந்தியா முன்பு பெரும்பாலும் உடைந்த அரிசியை ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தது.

**9. இந்தியா சமீபத்தில் அந்தமான் கடல் மற்றும் மலாக்கா நீரிணையில் எந்த நாட்டுடன் இணைந்து ஒருங்கிணைந்த ரோந்துப்பயிற்சியை மேற்கொண்டது?**

அ. வங்காளதேசம்

**ஆ. இந்தோனேசியா ☑**

இ. இலங்கை

ஈ. பிரான்ஸ்




✓ இந்திய மற்றும் இந்தோனேசிய கடற்படைக்கு இடையிலான 38ஆம் இந்தியா–இந்தோனேசியா ஒருங்கிணைந்த ரோந்துப்பயிற்சி (IND–INDO CORPAT) அந்தமான் கடல் மற்றும் மலாக்கா நீரிணையில் நடத்தப்படுகிறது. அந்தமான் மற்றும் நிக்கோபார் படைப்பிரிவின் கடற்படைப் பிரிவுகள் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான முதல் தொற்றுநோய்க்குப் பிந்தைய ஒருங்கிணைந்த ரோந்து (CORPAT) இதுவாகும். இருகடற்படைகளும் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் பன்னாட்டு கடல் எல்லைக்கோட்டின் வழியாக 'CORPAT'ஐ மேற்கொண்டு வருகின்றன.

**10. 'பிரதம மந்திரி தேசிய தொழிற்பயிற்சி மேளா'வுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் ☑**

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

இ. MSME அமைச்சகம்

ஈ. கல்வி அமைச்சகம்

कौशल विकास और
उद्यमशीलता मंत्रालय
MINISTRY OF
SKILL DEVELOPMENT
AND ENTREPRENEURSHIP
सत्यमेव जयते

✓ திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் ஒவ்வொரு மாதமும் பிரதம மந்திரி தேசிய தொழிற்பயிற்சி மேளாவை ஏற்பாடு செய்யும். ஒரு நபரின் பயிற்சிக்காலத்தின் முடிவில், அவர்களுக்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் –கான தேசிய கவுன்சில்மூலம் (NCVET) அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும். இம்மேளாவின் முதன்மை நோக்கம் நகரங்களிலிருந்து தொழில்பழகுநரை பணியமர்த்துவதை ஊக்குவிப்பதாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நெகிழி தடை ஜூலை 1 முதல் அமல்**

ஒருமுறை மட்டும் பயனபடுத்தக்கூடிய நெகிழி (பிளாஸ்டிக்) பொருள்களுக்கு விதிக்கப்பட்ட தடை வரும் ஜூலை 1–ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. நெகிழி கழிவு மேலாண்மை திருத்த விதிமுறைகளை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 12–ஆம் தேதி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்தது.

அதன்படி, ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு வைத்தல், விநியோகித்தல், விற்பனை, பயன்பாட்டிற்கு வரும் ஜூலை 1 முதல் நாடு முழுவதும் தடை விதிக்கப்படுகிறது. ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழி குப்பைகளால் நிலப்பரப்பிலும், நீர் நிலைகளிலும், ஆழ்கடல் பரப்பிலும் பாதிப்பு ஏற்படுகிறது.

2019–இல் நடைபெற்ற ஐ.நா.வின் நான்காவது சுற்றுச்சூழல் மாநாட்டில், ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருள்களால் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்து உலக அளவில் கவனஞ்செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்தியா முன்மொழிந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தடை செய்யப்படும் நெகிழிப் பொருள்கள்:** நெகிழி குச்சிகளுடன் கூடிய காது குடையும் பஞ்சு, நெகிழி குச்சிகளுடன் கூடிய பலூன்கள், நெகிழி கொடிகள், ஐஸ்கிரீம் குச்சிகள், அலங்காரத்திற்கான தெர்மோகோல், நெகிழி தட்டுகள், குவளைகள், நெகிழி கத்தி, ஸ்பூன், போர்க், உறிஞ்சுக்குழல், டிரே, சுவீட் பாக்ஸ், அழைப்பிதழ் அட்டைகள், சிகரெட் பாக்கெட்டுகள், 100 மைக்ரானுக்கும் குறைவான நெகிழி அல்லது பிவிசி பேனர்கள் போன்றவை தடைசெய்யப்பட்ட பொருள்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இதில் அரசுக்கு உதவும் வகையில், மக்களுக்கு அதிகாரம் அளிக்க குறைதீர்ப்பு செயலியை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கியுள்ளது என்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 'பிரக்ரித்தி' என்ற இலட்சினை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

---

**2. 29–06–2022 – தேசிய புள்ளியியல் நாள்**

பொருளாதார திட்டமிடல் மற்றும் புள்ளியியல் துறைக்கு மறைந்த பேராசிரியர் பிரசந்த சந்திர மகாலனோபிஸ் வழங்கிய மதிப்புமிகு பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அவரது பிறந்தநாளான ஜூன்.29 ஒவ்வோர் ஆண்டும் புள்ளியியல் நாளாக ஒன்றிய அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டின் சமூக–பொருளாதார திட்டமிடல், வளர்ச்சிக்கான கொள்கை வகுத்தல் ஆகியவற்றில் புள்ளியியலின் பங்களிப்பும், முக்கியத்துவமும் குறித்து பொதுமக்களிடையே குறிப்பாக இளந்தலைமுறையினர் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது புள்ளியியல் நாளின் முக்கிய நோக்கமாகும். ஆண்டுதோறும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருப்பொருளில் இந்த நாள் கொண்டாடப்படும். இந்த ஆண்டு (2022) "நீடித்த வளர்ச்சிக்கான தரவுகள்" என்பது கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

**3. தொழில்நுட்ப குளறுபடியை தீர்க்க 50 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி**

கல்லூரி மாணவர்கள் 50 ஆயிரம் பேருக்கு, தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்யும், 'நாளைய திறன்' பயிற்சி திட்டம் விரைவில் தொடக்கப்படும் என, தமிழக தகவல் தொழில்நுட்பவியல் துறை தெரிவித்துள்ளது.

இதன்படி, 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், 'நாளைய திறன்' என்ற திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ், கல்லூரி மாணவர்கள் 50 ஆயிரம் பேருக்கு, தொழில்நுட்பத்தை பயன்படுத்தும்போது ஏற்படும் கோளாறுகளை சரி செய்வதற்கான பயிற்சியளிக்கப்படும்.

---

### 4. தொழிலணங்கு – பெண்களை தொழில்முனைவோராக்கும் தமிழ்நாடு அரசின் திட்டம்

தமிழ்நாட்டில் துளிர் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் வகையில் இளைஞர்களை தொழில்முனைவோராக்கும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு புத்தொழில்கள் மற்றும் புத்தாக்க இயக்கம் (Tamil Nadu Startup and Innovation Mission) மேற்கொண்டு வருகிறது. அவ்வகையில் தற்போது பெண்களின் மறுமலர்ச்சிக்காக 'தொழிலணங்கு' என்ற புதிய திட்டத்தை கையில் எடுத்துள்ளது தமிழ்நாடு புத்தொழில்கள் மற்றும் புத்தாக்க நிறுவனம்.

சுய உதவிக் குழுக்களின் செயல்முறையை முற்றிலுமாக மாற்றி அதன் உறுப்பினர்களை ஆக்கபூர்வமான தொழில் முனைவோர்களாக உருவாக்குவதே இம்முயற்சியின் நோக்கம். இதனடிப்படையில் பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து 'Smart SHG' குழுக்களில் இருந்து உருவாகும் தொழிற்முயற்சிகளுக்கு பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்யவிருக்கின்றன.

---

### 5. உயர்நீதிமன்றத்தில் முதல் முறை பெண் தபேதார் நியமனம்

சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக திலானி என்ற பெண் தபேதாராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அண்மையில் நடந்த சென்னை உயர்நீதிமன்ற பணியாளர்கள் நியமனத்தில், இவர் தேர்வு செய்யப்பட்டு, தற்போது தபேதாராக நீதிபதி மஞ்சுளாவிடம் பணிபுரிந்து வருகிறார்.

---

### 6. 11ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சார்ஜாவில் 2023ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெறும்

11ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சார்ஜாவில் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு சிகாகோவில் 10ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. உலகத் தமிழாராய்ச்சி ஆனது 1966ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தி வருகிறது.

---

**1. அண்மையில் தொடங்கப்பட்ட, 'தக் கர்மயோகி' இணையதளத்தின் நோக்கம் என்ன?**

அ. குறை நிவர்த்தி

**ஆ. ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல் ☑**

இ. சிறந்த கலைஞர்களுக்கு விருது வழங்கல்

ஈ. பொதுமக்கள் பங்கேற்பு

✓ அஞ்சல் துறையின், 'தக் கர்மயோகி' என்னும் இ–கற்றல் இணையத்தளத்தை தகவல் தொடர்புத்துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைத்தார். அரசு ஊழியர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக பிரதமர் மோடியால் உருவாக்கப்பட்ட, 'மிஷன் கர்மயோகி' திட்டத்தின்கீழ் இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஹெர்மிட்' என்றால் என்ன?**




அ. ஏவுகணை

ஆ. செயற்கைக்கோள்

**இ. உளவு நிரல் ☑**

ஈ. தடுப்பூசி

✓ அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'ஹெர்மிட்' என்பது சமீபத்திய அதிநவீன உளவு நிரலின் பெயராகும். இது இத்தாலி மற்றும் கஜகஸ்தானில் ஐபோன்கள் மற்றும் ஆண்ட்ராய்டு சாதனங்களை குறிவைத்ததாக நம்பப்படுகிறது. 'RCS லேப்' என்ற இத்தாலிய விற்பனையாளரால் இந்த உளவு நிரல் உருவாக்கப்பட்டுள்ளது. கூகிளின் அச்சுறுத்தல் பகுப்பாய்வுக்குழு சமீபத்தில் 'ஹெர்மிட்' எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்த ஒரு விரிவான வலைப்பதிவு இடுகையை வெளியிட்டது.

**3. தேசிய நெடுஞ்சாலைகள் சிறப்புறு விருதுகள் (NHEA) எவ்வகையினரைப் பாராட்டுவதற்காக நிறுவப்பட்டது?**

**அ. நிறுவனங்கள் ☑**

ஆ. பொதுமக்கள்

இ. அதிகாரத்துவவாதிகள்

ஈ. பணியாளர்கள்

✓ நாட்டில் சாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த மற்றும் வலுப்படுத்துவதற்காக, சாலைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்கப்படுத்த, நடுவண் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை, கடந்த 2018ஆம் ஆண்டு முதல் தேசிய நெடுஞ்சாலைகள் சிறப்புறு விருதுகளை வழங்கி வருகிறது. இது சாலைக் கட்டுமான மற்றும் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுவோரிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும். நாடு முழுவதுமுள்ள சாலை சொத்துக்களை சரியாகப் பராமரித்து வரும் மற்றும் சுங்கச்சாவடிகளுக்கான நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக விருது வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற RAMP திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகத்துடன் எது?**

அ. கல்வி அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

✓ புது தில்லியில் நிகழ்ந்த 'உத்யமி பாரத்' நிகழ்வில், 'MSME செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல்' (RAMP) திட்டத்தைத் தொடங்க பிரதமர் மோடி பங்கேற்றார். 'முதன்முறை MSME ஏற்றுமதியாளர்களின் திறனைக் கட்டமைத்தல்' திட்டத்தையும், 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' (PMEGP) புதிய அம்சங்களையும் அவர் தொடங்கினார். MSME Idea Hackathon, 2022–இன் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டு தேசிய MSME விருதுகள் அப்போது வழங்கப்பட்டன.

**5. 'தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூன்.25

ஆ. ஜூன்.27




**இ. ஜூன்.28 ☑**

ஈ. ஜூன்.30

✓ காப்பீட்டுத்திட்டத்தில் முதலீடு செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்–காக ஆண்டுதோறும் ஜூன்.28ஆம் தேதி தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிறது. லண்டனில் நிகழ்ந்த ஒரு பெரிய தீ விபத்துக்குப்பிறகு, நிக்கோலஸ் பார்பன் என்பார் கிபி 1666–இல் முதல் தீ காப்பீட்டு நிறுவனத்தை நிறுவினார். அதன்பிறகு, காப்பீட்டு சந்தை பல புதிய துறைகளுக்கு விரிவடைந்துள்ளது.

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கிஹோடோ ஹோலோஹான்' தீர்ப்புடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ. சிக்கிம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. குஜராத்

✓ மகாராஷ்டிர மாநில அரசியல் நெருக்கடிக்கு இடையில், துணை சபாநாயகரின் பங்கு மற்றும் அதிகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. 'கிஹோடோ ஹோலோஹான் எதிர் சாசில்ஹு & அதர்ஸ்' (1992) என்ற வரலாற்றில் பதிந்த தீர்ப்பில், எம்எல்ஏக்கள் தகுதி நீக்கம் தொடர்பான வழக்குகளை முடிவெடுப்பதில் சபாநாயகருக்கு இருக்கும் முழுமையான விருப்புரிமையை உச்சநீதிமன்றம் உறுதிசெய்திருந்தது.

**7. இந்தியாவில், 'குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு வாரம்' கடைப்பிடிக்கப்பட்டது எப்போது?**



அ. ஜூன் 01–07

**ஆ. ஜூன் 12–20 ☑**

இ. ஜூன் 20–27

ஈ. ஜூலை 01–07

✓ குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக நாளை முன்னிட்டு (ஜூன்.12) ஜூன்.12 முதல் ஜூன்.20 வரை 75 இடங்களில் தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், NCPCR 'குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு வாரம்' கடைப்பிடித்தது. இவ்வார கடைப்பிடிப்பின்போது மாநில ஆணையம், மாவட்ட அதிகாரிகள், குழந்தைகள் நலக் குழுக்கள்போன்ற அதிகாரிகளின் உதவியுடன், நாடு முழுவதும் 75 இடங்களில் வேலையில் ஈடுபட்டுள்ள குழந்தைகள் மீட்கப்படுவார்கள்.

**8. எந்த நாட்டில் நடைபெற்ற பாவோ நூர்மி விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தனது தேசிய சாதனையை முறியடித்தார்?**



அ. இந்தோனேசியா ஆ. மங்கோலியா

**இ. பின்லாந்து ☑** ஈ. துருக்கி

✓ பின்லாந்தின் துர்கு நகரத்தில் நடைபெற்ற பாவோ நூர்மி விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தனது தேசிய சாதனையை முறியடித்தார். அங்கு அவர் 89.30 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து, அவரின் டோக்கியோ ஒலிம்பிக் சாதனையை (87.58 மீட்டர்) விஞ்சி புதிய தேசிய சாதனையைப் படைத்தார். இது அவரை தடகளத்தில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வீரர் எனவாக்கியது. அவரது சமீபத்திய ஈட்டியெறிதல், அவருக்கு வெள்ளியைப் பெற்றுத்தந்தது.

**9. இந்திய இரயில்வேயின் 'பாரத் கௌரவ்' திட்டத்தின்கீழ் இயக்கப்பட்ட முதல் இரயில் கீழ்க்காணும் எவ்விரு நகரங்களுக்கு இடையே கொடியசைத்து தொடக்கி வைக்கப்பட்டது?**



அ. மும்பை–ஆமதாபாத்

**ஆ. கோயம்புத்தூர்–ஷீரடி ☑**

இ. இராமேஸ்வரம்–அயோத்தி

ஈ. பூரி–ஹைதராபாத்

✓ இந்திய ரயில்வேயின், 'பாரத் கௌரவ்' திட்டத்தின்கீழ் முதல் இரயில், மகாராஷ்டிர மாநிலத்தின் சாய்நகர் ஷீரடிக்கும் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் வடக்கு ரயில் நிலையத்திற்கும் இடையே கொடியசைத்துத் தொடக்கிவைக்கப்பட்டது. இக்குறிப்பிட்ட இரயிலை, 'சௌத் ஸ்டார் ரயில்' என்ற தனியார் நிறுவனம் இயக்கும். ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் கோயம்புத்தூரிலிருந்து புறப்படும் இது வியாழக்கிழமைகளில் ஷீரடியை சென்றடையும். இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் வரலாற்று இடங்களை இந்தியா மற்றும் உலக மக்களுக்கு காட்சிப்படுத்துவதே இந்த 'பாரத் கௌரவ்' திட்டத்தின் நோக்கமாகும்.

**10. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உலகளாவிய மாநாட்டை நடத்திய நாடு எது?**



அ. அமெரிக்கா

ஆ. ஜப்பான்

**இ. எகிப்து ☑**

ஈ. பிரான்ஸ்

✓ எகிப்து, ஷர்ம் எல் ஷேக்கில் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எட்டாவது உலகளாவிய மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டைப் பிரதிநிதிகள் சபை மற்றும் நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம் (IPU) கூட்டாக ஏற்பாடு செய்துள்ளது. 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் இருநூறு இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கான உத்திகள் குறித்து விவாதிக்கவுள்ளனர். நாகாலாந்தின் முதல் பெண் மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ் பாங்கோன் கொன்யாக் இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பாக பங்கேற்றார்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அட்டர்னி ஜெனரல் வேணுகோபாலுக்கு 3 மாதங்கள் பணி நீட்டிப்பு**

அட்டர்னி ஜெனரலாக (நடுவணரசுத்தலைமை வழக்குரைஞர்) K K வேணுகோபால் (91) மேலும் 3 மாதங்களுக்கு பணியாற்ற ஒப்புக்கொண்டுள்ளார். மத்திய அரசின் வேண்டுகோளை அடுத்து அவர் பணி நீட்டிப்பை ஏற்றுக் கொண்டார். அவரது பதவிக்காலம் ஜூன்.30–ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. தனிப்பட்ட காரணங்களால் அவர் பதவியில் தொடர விரும்பம் தெரிவிக்கவில்லை. எனினும், மத்திய அரசின் வேண்டுகோளை ஏற்று அவர் அடுத்த 3 மாதங்களுக்கு பணியில் தொடரவிருக்கிறார்.

2017 ஜூலை முதல் அவர் அட்டர்னி ஜெனரலாகப் பணியாற்றி வருகிறார். மூத்த வழக்குரைஞரான அவர், அரசியல்சாசன சட்டம், பெருநிறுவனச்சட்டங்கள் தொடர்பான வழக்குகளில் ஆஜராகி வருகிறார். 1979–80–ஆம்

ஆண்டுகளில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாகவும் அவர் பதவி வகித்துள்ளார். 2002–ஆம் ஆண்டு 'பத்ம பூஷண்' விருதும், 2015–ஆம் ஆண்டு 'பத்ம விபூஷண்' விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

---

**2. ஆஸ்கர் குழுவில் உறுப்பினராக அழைக்கப்பட்ட முதல் தென்னிந்திய நடிகர் சூர்யா**

ஆஸ்கர் விருது கலை மற்றும் அறிவியல் குழுவில் உறுப்பினராக அழைப்புவிடுவிக்கப்பட்ட முதல் தென்னிந்திய நடிகர் என்ற பெருமையை சூர்யா பெற்றுள்ளார். ஒவ்வோர் ஆண்டும் ஆஸ்கர் விருது குழுவில் உறுப்பினராக சேர பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் அழைக்கப்படுவார்கள். அந்த வகையில் இந்த ஆண்டு கலை மற்றும் அறிவியல் பிரிவில் இந்தியா சார்பாக நடிகர் சூர்யா அழைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து ஆஸ்கர் விருது குழுவில் உறுப்பினராகவிருக்கும் முதல் தென்னிந்திய நடிகர் என்ற பெருமையை நடிகர் சூர்யா பெற்றுள்ளார். அவருடன் ஹிந்தி நடிகை கஜோலுக்கும் அழைப்புவிடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய சார்பில் இயக்குநர் பிரிவில் பான் நலின் என்பவருக்கும் ஆவணப் படங்கள் பிரிவில், சுஷ்மித் கோஷ் மற்றும் ரின்டு தாமஸ் ஆகிய இருவருக்கும், எழுத்தாளர்கள் பிரிவில் ரீமா காக்டி என்பவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

---

**3. தமிழ்நாட்டில் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

குடியரசுத்தலைவர் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மக்களவை, மாநிலங்களவை, சட்டப்பேரவை உறுப்பினர்கள் வாக்களிக்கவுள்ளனர். தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் 234 பேரும், மக்களவை உறுப்பி–னர்கள் 39 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 18 பேரும் உள்ளனர். மொத்தமாக 291 பேர் வாக்காளர்கள்.

---

**4. சிறந்த மாணவ நகரங்கள் தரவரிசை: 125–ஆவது இடத்தில் சென்னை**

பிரிட்டன் தலைநகரம் லண்டனில் உள்ள குவாக்வரெல்லி சிமண்ட்ஸ் (QS) உயர்கல்வி பகுப்பாய்வு நிறுவனம், வெளிநாட்டு மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்கான சிறந்த நகரங்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான அந்தப்பட்டியலில் சென்னை 125–ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் உயர்கல்வியின் நிலை குறித்து அறிய, கடந்த 2010–11–ஆம் ஆண்டு முதல் அனைத்து இந்திய உயர்கல்வி ஆய்வை மத்திய கல்வி அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. 2018–19–ஆம் ஆண்டு ஆய்வின்படி, இந்தியப்பல்கலைக்கழகங்களில் 47,427 வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

---

**5. வான்வழி இலக்கை அழிக்கும் அதிவேக, 'அப்யாஸ்' சோதனை வெற்றி**

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிவேக 'அப்யாஸ்' வான்வழி இலக்கு வாகனம் (ஹீட்) ஒடிசா கடற்கரையில் உள்ள சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து ஏவப்பட்டு வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

இதுகுறித்து ஒடிசா சந்திப்பூர் ஐடிஆர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) கீழ் உள்ள வானூர்தி அபிவிருத்தி நிறுவனத்தால் 'அப்யாஸ்' உருவாக்கப்பட்டது. வானிலுள்ள இலக்குகளைக் குறைந்த உயரத்தில் விரைந்து சென்று தாக்குவதும், தரையிலிருந்து கட்டுப்படுத்தும் வகையில் ஆளில்லாத விமானம் போலச் செயல்படுவதும் 'அப்யாஸ்' வாகனத்தின் சிறப்பாகும். இச்சோதனையின்போது, குறைந்த உயரத்தில் பாயும் தன்மையுள்ள இலக்கு வாகனத்தின் செயல்திறன், நிலைத்தன்மை, அதிக தாக்கும் திறன் உள்ளிட்டவை உறுதிசெய்யப்பட்டன. இந்த இலக்கு வாகனம், தரைக் கட்டுப்பாட்டிலிருந்து முன்னரே நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி குறைந்த உயர விமானப்பாதையில் பறந்தது.

இது ரேடார் மற்றும் எலக்ட்ரோ–ஆப்டிக்கல் இலக்கமைப்பு உள்ளிட்ட ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து ஏற்கெனவே நிறுவப்பட்ட பல்வேறு கண்காணிப்பு சென்சார்களால் கண்காணிக்கப்பட்டது.

ஒலியின் வேகத்தில் பாதி வேகத்துடன் (சப்–சோனிக்) நீண்ட தூரத்துக்கு பயணம் செய்யும் வகையில் எரிவாயு டர்பைன்களால் இந்த வாகனம் இயங்குகிறது. மைக்ரோ–எலக்ட்ரோ மெக்கானிக்கல் சிஸ்டம்ஸ் அடிப்படையிலான கட்டுப்பாட்டுக் கருவிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. தவிர, முழுமையாக தானியங்கி முறையில் இயங்கும் வகையில் இது திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.